# Volume 16

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**(The Feast of the true sayings of God)**

அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இவைகளைக் கேட்டபொழுது**,** அவரை நோக்கி**:** தேவனுடைய ராஜ்யத்தில் போஜனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்**.** (லூக்கா 14:15)


**THE SCRIPTURE FEAST MINISTRIES**

**REV: PAUL BENJAMIN**
**FOUNDER AND AUTHOR**

**REGD OFFICE:**
**NO:104, EXTN 7 , MAHA LAKSHMI NAGAR, NANDIVARAM,**
**GUDUVANCHERY, KANCHIPURAM DIST CHENNAI 603 202 .**
**TAMIL NADU, SOUTH INDIA**

**Mobile : + 91 94456 35860 +91 73583 23277**

**Web : www.scripturefeast.net, Blog : www.scripturefeast.info**

**Email: scripturefeast@gmail.com**


**FOREWORD**
**PASTOR : A. THOMAS RAJ**
**PRESIDENT, APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து ஊழியங்கள்

1.பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானவைகள்
2.பல ஆங்கில பதிப்பு வேதாகமத்துடன் ஒப்பிடக்கூடியவைகள்
3.தேவ நாமத்துடன் பல தேவ தரிசனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டவைகள்.
4.பெரிய மதங்களையும் அதன் உட்பிரிவுகளையும் உள்ளடக் கியவைகள்.
5.வேதத்தின் அடிப்படை உபதேசங்களை அஸ்திபாரமாகக் கொண்டவைகள்
6. மெய்யான தேவ ஞானத்தை எளிமையாக கற்றுக் கொள்ளும் வழி முறைகள்.
7.தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களுக்கு ஜெயங்கொள்ளு வதற்காக தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.
8.வேதாகம மையக்கருத்துக்கள் அதன் இணையான தேவ வார்த்தைகளுடன் இரண்டறக் கலப்பவைகள்.

TSFM

For the Pre - Destinate Conquering

@ One among the The Bride in 1000 generation years kingdom

# தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகம்

## தலைப்பு **பதினா**று

### கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

பொருளடக்கம்


* **மதிப்புரை**
* **முன்னுரை**
* **ஆசிரியர் உரை**


16-1 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

16-2 ஒருவன் தன்னுடைய இருதயத்திலே, கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கிழ்படிந்து நடக்கிறபோது; அவனுக்கு தேவனுடைய இரட்சிப்பு மிகவும் சமிபமாக இருக்கிறது:-

16-3 ஒருவன் தன்னுடைய வாயினாலே, கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிடுகிறபோது; நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

16-4 தேவனுடைய இரக்கத்தின்படியே, நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பில் நம்மை இரட்சித்தார்:-

16-5 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம், ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காண்பதற்கு முதலாவது திறவுகோல்:-

16-6 பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசுகிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்:-

16-7 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடைய சுவிசேஷத்தின் கிரியைகளுடைய பிரமாணங்கள்:-

16-8 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்:-

16-9 தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்; நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்:-

16-10 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள்: பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு, இரண்டாவது திறவுகோல்; ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது :-

16-11 முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் மூலம், தேவன் கிருபையினால் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

16-12 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் கிரியைகள் இல்லாதபோது; அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட இரட்சிப்பு இடறி விழுந்து மரணமடைகிறது:-

16-13 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் இடறி விழாமல்; கிருபையினுடைய நீதியின் கிரியைகளின் மூலம், சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளுக்கு முன்னேறுதல்:-

16-14 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; கிருபையிலிருந்து தேவனுடைய சத்தியத்தினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

16-15 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைசெய்கிறபோது; தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறான்:-

16-16 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: கிறிஸ்துவுக்கு/சத்தியத்திற்கு உண்டாகும் பாடுகளை குறித்து, நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்:-

16-17 முன்மாரி, பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் மூலம்; தேவன் கிருபையினாலும் சத்தியத்தினாலும் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

16-18 தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, தேவனாலே பிறந்தவர்கள்: மாம்சமாக மாறின இருதயமாகிய பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

முடிவுரை

**மதிப்புரை / Foreword**

*JESUS NEVER FAILS*
*"TO MAKE READY A PEOPLE PREPARED FOR THE LORD"*

**APOSTOLIC CHRISTIAN ASSEMBLY**

'Speak evil no man (Titus 3:2)' (Regd.No. 80 of 1957) 'Follow peace with all men (Heb. 12.14**)'**

**Founder : Pastor G. SUNDRAM** **Chief Pastor : M.K.SAM SUNDARAM**

**Pastor . A. THOMASRAJ** **G.SUKUMAR SAMUEL** **K.R. SELWIN**
President Hon.secretary Treasurer

*The grass withers, the flower fades,*
*But the word of our God stands forever. " Isa. 40:8*

The Word of God is blameless, faultless, without defect, deserving no censure. And the Word of God has to be Preached to all People. All over the Earth with conviction and clarity for the edification of the hearers.

Careful study and meditation of the Scriptures when undertaken with the grace of God depending on the Holy Spirit's guidance will bring hidden truths to light.

The work and efforts of Bro. Paul Benjamin in this regard is commendable. I appreciate his passionate toil in the Lord's Kingdom. My prayers are that his teaching and writing will profit and prepare many for the coming of our Lord and savior Jesus Christ. Amen.

Pastor A. Thomasraj
President
Apostolic Christian Assembly

No. 26. Shanmugarayan Street, Purasawalkam, Chennai – 600 007. ☎ : 26622775/ 26635583
Email :- info@acapryaerhouse.org, Web site : www. acaprayerhouse.org

# முன்னுரை

மனிதன் மாம்ச சரீரத்தில் வாழ்வதற்கு அவனுக்கு காற்று,தண்ணீர், போஜனம், வஸ்திரம், குடியிருப்பு எப்படி ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியமான தேவைகளோ; அது போலவே ஆவிக் குரிய மனிதன் வாழ்வதற்கு இந்த ஐந்து அடிப்படை தேவைகள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் மிக முக்கியமானது. இவைகளை உள்ளான ஆவிக்குரிய மனிதனின் ஐந்து ஆவிக்குரிய அடிப்படை தேவைகளை; புறம்பான மனிதனின் ஐந்து அடிப்படை தேவைகளோடு ஒப்பிட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| மாம்ச சரீரத்தின் தேவைகள்:- | | ஆவிக்குரிய சரீரத்தின் தேவைகள்:- |
|---|---|---|
| ஜீவ சுவாசம் | 1 | பரிசுத்த ஆவி |
| தண்ணீர் | 2 | நித்திய ஜீவத்தண்ணீர் |
| போஜனம் | 3 | நித்திய ஜீவ வார்த்தைகளின் போஜனம் |
| வஸ்திரம் | 4 | நீதியின் வஸ்திரம் |
| குடியிருப்பு | 5 | பரலோக வாசஸ்தலம் |

இவைகளை உட்கொள்ளும் அளவு அவரவர் தன்மைக் கேற்றபடி மாறுபடுகிறது. இந்த ஐந்து தேவைகள் குறையும்போதோ, அல்லது தேவைப்படும் போதோ, சரீரமானது இவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது. எப்படி மாம்ச சரீரம் தன்னு டைய தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறதோ, அது போலவே ஆவிக்குரிய சரீரமும் இவைகளை ஆவிக்குரிய நிலை யில் அவரவர் தன்மைக்கேற்றபடி பூர்த்தி செய்ய முயற்சி செய்து போராடுகிறது.

மனச்சாட்சியை தேவன் மனிதனுக்கு கொடுத்து அதன் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் அவன் தேவனுடன் ஆவியில் தொடர்பு கொண்டு தன்னுடைய ஆத்துமாவின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம், மேலும் இவைகளுக்காக மனச்சாட்சியில் அறிவு, புத்தி, ஞானம் இவைகளை தேவன் மனிதனுக்கு அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். ஒருவன் தன் ஆத்துமாவின் தேவைகளை சந்திக்கும்படி நீண்ட தூரம் பயணம் செய்யவோ அல்லது மிக கடினமாக வேலை செய்யவோ தேவையில்லை.

ஆத்துமாக்களின் பிதாவாகிய தேவன் மனிதனுக்கு மிக அருகிலும் மிக எளிமையாகவும் தன் ஆத்துமாவின் தேவைகளை சந் திக்கும்படி தேவ வார்த்தைகளை தேவன் நமது இருதயத்திற்கும் வாய்க்கும் சமீபமாக வைத்திருக்கிறார்.

மனச்சாட்சியில் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள் வது பொதுவான இரட்சிப்பு, மேலும் இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை ஏற்றுக் கொள்வது விசேஷ இரட்சிப்பு

விசேஷ இரட்சிப்பின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1.ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும் மனம் மறுரூபம் அடைந்து தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன் மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால் தேவ னுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும் அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும் அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழா வில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா என்று கெம்பீர சத்தத்தோடு ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமை யையும் சாவுள்ளது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

பொதுவான இரட்சிப்பும் மற்றும் விசேஷ இரட்சிப்பின் வளர்ச்சிப் படிகளும் மிக எளிமையான முறையில் தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிருபையினால் இந்த தேவனுடைய சத்தியமான வசனங்களின் விருந்தை பல ஆங்கில மொழிப் பதிப்பு வேதாகமங்களுடனும் மற்றும் அவரவர் சொந்த தாய்மொழி வேதாகமங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ளும் அளவிற்கு விவரிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்க்க தரிசன வசனங்களின்படி ஜலத்தினால் சமுத்திரம் நிறைந்திருப்பது போல பூமி கர்த்தரைக் குறித்து அறிகிற அறிவால் நிறைந்திருக்கும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

இந்த தீர்க்க தரிசன வசனத்தின் படி இந்த வசனங்களை வாசிக்கிறவன், கேட்கிறவன் இதில் எழுதியுள்ளவற்றை கைக்கொள்கிறவன் பாக்கியவான். இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி ஏற்கனவே உங் களுக்கு அறிவிக்கப்பட்ட தேவனுடைய சத்தியமான வசனங்களைக் கொண்டே மீண்டும் இவைகள் இப்பொழுது; பத்து தேவனுடைய

வார்த்தைகளின் தலைப்புக்களின் மூலம் விவரிக்கப்பட்டு, உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படி பொதுவான இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் எழுதும்போது, பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தைக்குறித்து எழுதுவது நலமாக கண்டது இந்த தீர்க்க தரிசன வசனத்தின்படி தங்களது பெயர் பூமியில் எழுதப்படாமலும், ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்ட பெயர் அழிக்கப்படாமலும், ஞாபக புஸ்தகத்தில் பெயர் எழுதப்படும் படியாகவும் இவைகளை மீண்டும் ஞாபகப் படுத்திக்கொள்வோம் ஆமென்.

# ஆசிரியர் உரை

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் இராஜாவாக வெளிப் படப்போகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அவர் இராஜாவாக முடிசூட்டப்படும் தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இந்த நற்செய்தியை தேவனுடைய தரிசனமாகவும், அழைப் பிதழாகவும் எழுதி அனுப்பி இதன் பயனாக தேவனால் முன் குறிக் கப்பட்ட பரிசுத்தவான்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் ஊழியத்தை செய்கிறவர்களாக, இந்த தலைமுறையில் எழும்பும்படி நாங்கள் தரிசனம் நிறைவேற ஜெபத்துடன் ஊழியம் செய்து கொண்டு வருகிறோம்.

தேவ வார்த்தைகளை கண்டு, கேட்டு, உணர்ந்து கொண்டபடியால்; தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவின்படி தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே ஆவியில் மறுரூபம் அடைந்து தேவ தரிசனத்தைப் பெற்றேன்.

தரிசனம் :- கர்த்தர் எனக்கு பிரதியுத்திரமாக : நீ தரிசனத்தை எழுதி, அதை கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகையிலே தீர்க்க மாக வரை.

எழுத்தின்படி பொருள் :- காகிதம், தோல்சுருள், கற்பலகை உலோகத்தினாலான பலகை இவைகளில் தேவ தரிசரினத்தை எழுதி அறிவிப்பது.

ஆவியின்படி பொருள் :- தேவ வார்த்தைகளை வாசிப்பது, கேட்பது, ஆலோசனையாக ஏற்றுக்கொள்வது, விசேஷ பயிற்சிகளினால் உணர்ந்து கொள்ளுவது ஆகியவற்றின் மூலம் சதையாகிய இருதயப்பலகையின் மேல் தேவ தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

ஞான அர்த்தத்தின்படி பொருள் :- கணினியின் கடந்தோடுகிற திரையில் தரிசனத்தை வாசிக்கும்படி கணினியின் விசைப்பலகை யிலே தரிசனத்தை எழுதி அறிவிப்பது.

தரிசனத்தை மிக சுருக்கமாகவும், வெளிப்படையாகவும், வேதத்தில் உள்ளபடி அவரவர் கேட்டறியும் அளவிற்கேற்றபடி எழுதி, அவைகளை எழுத்தின்படி, ஆவியின் படி, ஞான அர்த்தத்தின்படி ஆகிய மூன்று வழிகளிலும் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தில் பங்கடையும்படி அழைப் பிதழ்களை அனுப்பும் இந்த ஊழியத்திற்காக தேவைகள் அநேகம் உண்டு.

இப்படிப்பட்ட பல கிருபை வரங்கள், ஊழியதரிசனங்கள் மற்றும் பல ஆசீர்வாதங்கள், தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்து வின் அவயவங்களான நமக்கு தேவ ஆவியானவர் பகிர்ந்து கொடுத் திருக்கிறார்.

கிறிஸ்துவாகிய தலையைப் பற்றிக்கொண்டு கிறிஸ்துவின் அவயவமான எங்கள் ஊழியம் அதன் முழு பெலத்துடன் பொரு ளாதார ஆசீர்வாதங்களை பெற்று செயல்பட முயற்சி செய்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற கிறிஸ்துவின் அவயவங்களான நீங்களும் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல எங்களுக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொள்கிறோம்.

தேவன் பகிர்ந்து கொடுத்த சித்தத்தை நிறைவேற்றும்படி கிறிஸ்துவின் அவயங்களை இசைவாகக்கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவிற்குத்தக்கதாக கிரியைகளை செய்யும் போது; அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகு வதற்கேதுவான முழு சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. இப்படி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறை வேற்றி தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம். அல்லேலூயா, ஆமென்.

## கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

16-1 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

16-2 ஒருவன் தன்னுடைய இருதயத்திலே, கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு கிழ்படிந்து நடக்கிறபோது; அவனுக்கு தேவனுடைய இரட்சிப்பு மிகவும் சமிபமாக இருக்கிறது:-

16-3 ஒருவன் தன்னுடைய வாயினாலே, கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிடுகிறபோது; நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

16-4 தேவனுடைய இரக்கத்தின்படியே, நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பில் நம்மை இரட்சித்தார்:-

16-5 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம், ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காண்பதற்கு முதலாவது திறவுகோல்:-

16-6 பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசுகிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்:-

16-7 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடைய சுவிசேஷத்தின் கிரியைகளுடைய பிரமாணங்கள்:-

16-8 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்:-

16-9 தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்; நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்:-

16-10 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள்: பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு, இரண்டாவது திறவுகோல்; ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது :-

16-11 முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் மூலம், தேவன் கிருபையினால் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

16-12 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் கிரியைகள் இல்லாதபோது; அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட இரட்சிப்பு இடறி விழுந்து மரணமடைகிறது:-

16-13 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் இடறி விழாமல்; கிருபையினுடைய நீதியின் கிரியைகளின் மூலம், சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளுக்கு முன்னேறுதல்:-

16-14 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; கிருபையிலிருந்து தேவனுடைய சத்தியத்தினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

16-15 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைசெய்கிறபோது; தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறான்:-

16-16 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: கிறிஸ்துவுக்கு/சத்தியத்திற்கு உண்டாகும் பாடுகளை குறித்து, நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்:-

16-17 முன்மாரி, பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் மூலம்; தேவன் கிருபையினாலும் சத்தியத்தினாலும் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

16-18 தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, தேவனாலே பிறந்தவர்கள்: மாம்சமாக மாறின இருதயமாகிய பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

16-1 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

1-1 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்:-

1-2 கிருபையினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகள்:-

1-3 சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகள்:-

1-4 தேவனாலே பிறந்தவர்கள்: கர்த்தருடைய சரீரத்தை இன்னதென்று நிதானித்து அறிந்து போஜனபானம் பண்ணுகிறார்கள்:-

1-5 தேவனுடைய வார்த்தைகளினால் மாம்சமாக மாறினவர்கள்: மாம்சமாக மாறின, இருதயமாகிய பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

1-6 கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்:-

1-1 கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். ( Pro_16:6,)

தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார் :-

தேவனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். தேவனுடைய வார்த்தையின் ஜீவன்: மனுஷருக்கு ஒளியாயிருந்து, இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

Joh_1:1-5, Joh_1:12-14,Joh_3:3-8 , 1Jo_5:1, 1Jo_5:18,1Jo_2:29, 1Jo_3:9, 1Jo_4:7, 1Jo_5:4,

Psa 85:7 கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

Psa 85:8 கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.

Psa 85:9 நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

Psa 85:10 கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.

Psa 85:11 சத்தியம் பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானத்திலிருந்து தாழப்பார்க்கும்.

Psa 85:12 கர்த்தர் நன்மையானதைத் தருவார்; நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.

Psa 85:13 நீதி அவருக்கு முன்னாகச் சென்று, அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே நம்மை நிறுத்தும்.

கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும் தேவனுடைய இரட்சிப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

Joh_1:14-18, Gen_32:10, Gen_24:49, Exo_34:6-7, 2Sa_2:6, Psa_25:10,Psa_26:3, Psa_40:10-11 , Psa_57:3, Psa_57:10, Psa_61:7, Psa_69:13,Psa_85:7-13,Psa_86:15,Psa_89:14-19,Psa_138:2,Psa_115:1, Psa_108:4,Psa_111:7, Pro_3:3, Pro_14:22,Pro_16:6, Pro_20:28,Isa_16:5, Hos_4:1,Mic_7:20, Jos_2:14,

1-2 கிருபையினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகள்:-

நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல்: தமது இரக்கத்தின்படியே, முதலாம் ஆதாம் முதல் மோசே வரைக்கும், முதலாம் ஆதாமின் மீறுதலுக் கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டிருந்த மரணத்திலிருந்தும்:

மோசே முதல் கிறிஸ்துவின் முதலாம் வருகை வரைக்கும், வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்திதின்கீழ் அடைத்துப்போட்டிருந்ததை விடுதலையாக்கும்படி, மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

ஆகையால் கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்: என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கி, நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

முதலாம் ஆதாம் முதல் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து வரைக்கும், சுமார் அறுபத்திரெண்டு தலைமுறைகள்/நாண்கு ஆயிரம் வருடங்கள்/ஒரு மனிதன் தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் வரை தொடர்ந்து வந்துகொண்டிருந்த பாவம்/ மரணம்/சாபங்கள்,

ஆகியவைகள் மனிதனின் மேல் இருந்த கடன்கள் இந்த கடன்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது

இரக்கத்தின்படியே கிருபையினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளின் மூலம் நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றி தேவன் நம்மை இரட்சித்தார்

Eph 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

Eph 2:9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

Eph 2:10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

Eph 2:11 ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள்,

Eph 2:12 அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்.

Eph 2:13 முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.

Eph 2:14 எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து,

Eph 2:15 சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,

Eph 2:16 பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

Eph 2:17 அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்.

Eph 2:18 அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.

Eph 2:19 ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,

Eph 2:20 அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;

Eph 2:21 அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;

Eph 2:22 அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

Rom 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

Rom 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

Rom 8:3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

Rom 8:4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

Eph_2:1-7 , Eph_2:8-13 , Eph_2:14-22 ,Rom_5:1-2,Rom_3:25-28,Rom_4:5-10,Rom_4:11-16, Rom_3:26-31,Rom_6:14-17 ,Gal_2:15-20, Rom_11:1-6, 2Co_8:9, Eph_1:6-7 ,

2Ti_1:9,Heb_4:12-16 ,Heb_12:27-28,Jam_4:5-9 ,Rom_5:19-21, Rom_9:11-18, Act_15:11, Tit_3:4-8,

1-3 சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகள்:-

ஒரு மனிதன் தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் வரை, தொடர்ந்து வந்துகொண்டிருந்த பாவம்/ மரணம்/சாபங்கள்,ஆகியவைகள் மனிதனின் மேல் இருந்த கடன்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி; நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே தேவன் நம்மை இரட்சித்தார்.

ஆகையால் தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்: அவைகளுக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை தங்கள் அவயவங்களில் இருக்கிறதை உணர்ந்து கொண்டு; அது தங்களுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு தங்களை சிறையாக்கிக் கொள்ளுகிறபோது;( Rom 7:23  Rom 8:1-4 )

தேவனே மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

அதுபோல மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கு சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று;

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகவும்/பலியாகவும்/ காணிக்கையாகவும் தேவன் அங்கிகரிக்கிறார்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். Rom 12:1-2

தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்: நன்மைசெய்தால் மேன்மை உண்டு, நன்மைசெய்யாதிருந்தால் அவனுடைய பாவம், பலி மிருகமாக அவனுடைய இருதய வாசற்படியிலே படுத்திருக்கும்;

அவனுடைய பாவத்தை/பாவ மிருகமாகிய மாம்சத்தை/ஜென்ம பாவ மனிதனை/ அவனுடைய பாவ சரீரத்தை அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி, அவனுடைய பாவ மாம்சத்திலே அவனே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதின் மூலம்:

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளை பின்பற்றி, நியாயப்பிரமாணத்தின் நீதியை மனிதனே நிறைவேற்றுகிறபடியால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறான்.

மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறின பின்பு / இருதய வாசற்படியில் படுத்திருக்கும் ஜென்ம பாவ மனிதனை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த பின்பு/

தீமையை நன்மையாக மாற்றிய பின்பு/ நியாயப்பிரமாணத்தின் நீதிக்கு விரோதமாக வருகிற பாவங்கள் நிவிர்த்தியான பின்பு; நன்மையாகிய தேவனுடைய சத்திய வசனங்களின் பிரமாணங்களை நிறைவேற்றுகிறபோது: சத்தியத்திற்கு விரோதமாக வருகிற பாவங்கள் தேவனுடைய நியாத்தீர்ப்பினால் நிவிர்த்தியாகிறது.

நியாயப்பிரமாணத்தின் நீதிக்கு விரோதமாக வருகிற பாவங்களை நிவிர்த்தி செய்யாமல், நன்மையாகிய தேவனுடைய சத்திய வசனங்களின் பிரமாணங்களை நிறைவேற்றுகிறபோது; சத்தியத்திற்கு விரோதமாக வருகிற பாவங்களை நிவிர்த்தி செய்ய முடியாது, மேலும் தேவனுடைய சத்தியத்தின் வசனங்கள் தேவன் அனுப்பின நியாத்தீர்ப்பை நிறைவேற்றும்.

ஒருவனுடைய பாவ சரீரத்தை, அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி அவனுடைய பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் இருக்கிறபோது; அவனுடைய இருதய வாசற்படியில் படுத்திருக்கும் அந்த பாவமிருகம், அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து, அவனை அடிமைப்படுத்தி, அவனை ஆட்சி செய்யும்.

ஒருவன் பாவத்தை பலிசெலுத்தினால், அவன் பாவத்தை அவனே அடிமைப்படுத்தி அவனே பாவத்தை ஆட்சி செய்ய முடியும். அவன் பாவத்தை பலிசெலுத்தாமல் இருக்கிறபோது, பாவ மிருகம் அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து, அவனை அடிமைப்படுத்தி ,அவனை ஆட்சி செய்யும்.

Gen 4:6 And Jehovah saith unto Cain, `Why hast thou displeasure? and why hath thy countenance fallen?

Gen 4:7 Is there not, if thou dost well, acceptance? and if thou dost not well, at the opening a sin-offering is crouching, and unto thee its desire, and thou rulest over it.'

Gen 4:6 அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?

Gen 4:7 நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

Php 3:9 நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,

Php 3:10 இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,

Php 3:11 அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

Php 3:12 நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப்

பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

Php 3:13 சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,

Php 3:14 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

Php 3:15 ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

Rom 8:1-4;1Pe 3:16-21, 1Pe 4:1-6, 1Pe 2:19-25, 1Pe 4:16-19, Phi 3:9-14;Isa 26:1-9; Col 1:5-6,Tit 1:1-4, Heb 6:13-20, Heb 10:19-22, Heb 9:8-15, Heb 13:9-13; Rom 2:10-15, Gal 2:20-21,Gal 5:1-6,Gal 6:12-18;Col 2:11-14 Gal 5:14-18, Gal 5:19-26, Rom 6:1-8, Rom 6:9-13, Col 2:13-19, Col 2:20-25, Col 3:3-4,

1-4 தேவனாலே பிறந்தவர்கள்: கர்த்தருடைய சரீரத்தை இன்னதென்று நிதானித்து அறிந்து போஜனபானம் பண்ணுகிறார்கள்:-

தேவனுடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்தவர்கள், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அதிகாரங்களை சுதந்தரித்துக் கொள்ளுவதற்காக; தேவனுடைய புதிய உடன்படிக்கையின்படி, முதலாங்கூடாரமாகிய தங்களுடைய பாவ சரீரத்தை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறபோது: தங்களுடைய இரண்டாந் திரைக்குள்ளே இருக்கிற கல்லான இருதயம், தேவனுடைய மாம்சமான இருதயமாக மறுரூபமடைந்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறதின் மூலம் புத்தியுள்ள ஆராதனை நடைபெறுகிறது.

இவர்கள், இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரத்திலிருக்கிற மாம்சமான இருதயமாகிய தேவனுடைய பலிபீடத்தில், ஆவி,ஆத்துமா,சரீரத்தில் ஐக்கியமாயிருந்து; தேவனுடைய வார்த்தைகளின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படி, கர்த்தருடைய சரீரமாகிய வார்த்தைகளையும்

இரத்தமாகிய நியாத்தீர்ப்பையும் இன்னதென்று நிதானித்து அறிந்து போஜனபானம் பண்ணுகிறார்கள்.

இவர்கள்,கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களோடு ஐக்கியமாயிருந்து; இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து: தங்களுக்கு தேவன் பகிர்ந்து கொடுத்த, ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்கள்.

Luk_22:19-20,Joh_6:48-52, Joh_6:53-58,1Co_5:7-8;1Co_10:15-18; 1Co_11:23-26, Heb_9:8-10, Heb_13:9-13; Rom_12:1-2,

1-5 தேவனுடைய வார்த்தைகளினால் மாம்சமாக மாறினவர்கள்: மாம்சமாக மாறின, இருதயமாகிய பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரத்திலிருக்கிற மாம்சமான இருதயமாகிய தேவனுடைய பலிபீடத்தில், ஆவி,ஆத்துமா,சரீரத்தில் ஐக்கியமாயிருந்து; தேவனுடைய வார்த்தைகளின் உயிர்த்தெழுதளை நினைவுகூரும்படி புசித்த , கர்த்தருடைய சரீரமாகிய வார்த்தைகளையும், இரத்தமாகிய நியாத்தீர்ப்பையும், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த வார்த்தைகளாக வெளிப்படுத்துகிறார்கள்; அந்த வார்த்தைகளில் உள்ள ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்து, இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

Psa_40:8; Jer_31:33; Eze_11:19, Eze_36:25-27; Heb_8:10, Heb_10:16, Joh_14:10-17, Joh_14:18-25, Joh_15:1-8, Joh_15:9-15,Joh_15:16-21; Joh_15:22-27; Joh_17:14-20, Joh_17:21-26;

1-6 கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்:-

தேவனுடைய கிருபையினால், பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளின் மூலம் இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றி; தேவன் மனிதனுக்கு இலவசமாக இரட்சிப்பை கொடுக்கிற காரியத்தையும்,

தேவனுடைய சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளை மனிதன் பின்ப்பற்றி; சத்தியத்தின் நீதியை மனிதனே

நிறைவேற்றுகிறபடியால் மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறான், என்கிற இந்த காரியத்தையும் அறிந்து உணர்ந்து கொள்ளாதவர்கள்;

தங்களுடைய மனச்சாட்சியில் அவர்களுடைய சிந்தனைகள் குற்றமுண்டு குற்றமில்லையென்று சாட்சியிட்டு, ஒன்றையொன்று தீர்க்கிறதினால், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று உணர்ந்து கொள்ளுகிறபோது கர்த்தருக்குப் பயந்து மனுஷர் தீமையை விட்டு விலகுகிறதினால் அதற்கேற்றபடியுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்:-

Rom 2:13 நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்.

Rom 2:14 அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்.

Rom 2:15 அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.

Exo_20:1-11, Exo_20:12-20, 2Sa_23:3,2Ch_19:9-10,Neh_5:9, Job_4:6,Job_28:28, Psa_2:11, Psa_90:11 ,Psa_111:10, Pro_1:7, Pro_1:24-29,Pro_2:1-5, Pro_8:13,Pro_10:27, Pro_14:26-27 ,Pro_15:16, Pro_15:33, Pro_16:6, Pro_19:23, Pro_22:4, Pro_23:17,Isa_29:13, Isa_33:6, Jer_32:36-41, Act_9:31, Rom_3:17-18 , Rom_13:7 , 1Co_2:3,2Co_5:11, 2Co_7:1, 2Co_7:11, 2Co_7:15, Eph_5:21, Eph_6:5, Phi_2:12, 1Ti_5:20, 1Pe_2:17-18 , 1Pe_3:1-2, 1Pe_3:15, Jud_1:20-23, Rev_11:11-13,

2-0 ஒருவன் தன்னுடைய இருதயத்திலே கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து/ ஏற்றுக்கொண்டு, கிழ்படிந்து நடக்கிறபோது; அவனுக்கு தேவனுடைய இரட்சிப்பு மிகவும் சமிபமாக இருக்கிறது:-

Act 16:30 அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்.

Act 16:31 அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

Act 16:32 அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

Act 16:33 மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

Joh 6:35 இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

Joh 6:36 நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.

Joh 6:37 பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.

Joh 6:38 என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

Joh 6:39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

Joh 6:40 குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

Joh 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Joh 5:25 மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Joh 5:26 ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்.

Joh 5:27 அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

Joh 5:28 இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்;

Joh 5:29 அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

Act_16:30-33,Joh_5:24-29,Joh_6:35-40,Mar_9:23, Mar_16:16, Joh_3:15-16 , Joh_3:18 , Joh_3:36, Joh_6:35, Joh_6:47, Joh_7:38, Joh_11:25-26 , Joh_12:44 , Joh_12:46, Joh_14:12, Act_10:43, Rom_1:16, Rom_4:5, Rom_9:33, Rom_10:4, Rom_10:10-11 , 1Pe_2:6, 1Jo_5:1, 1Jo_5:5, 1Jo_5:10

3-0 ஒருவன் தன்னுடைய வாயினாலே கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிடுகிறபோது; நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

கர்த்தராகிய இயேசுவை ஒருவன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று அவன் இருதயத்திலே விசுவாசிக்கிறபோது; நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது.

Rom 10:5 மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக்குறித்து: இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான்.

Rom 10:6 விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?

Rom 10:7 அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி;

Rom 10:8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.

Rom 10:9 என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

Rom 10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

Rom 10:11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.

Rom 10:12 யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்.

Rom 10:13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

Rom_10:5-13, Deu_30:11-15,Mat_10:32-33; Luk_12:8; Rom_14:8-11; 1Jo_2:4,

4-0 தேவனுடைய இரக்கத்தின்படியே, நியாயப்பிரமாணத்திலிருந்து தேவனுடைய கிருபையினாலே உண்டாகிற இரட்சிப்பில் நம்மை இரட்சித்தார்.

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

Tit 3:4 நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது,

Tit 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

Tit 3:6 தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக,

Tit 3:7 அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

Tit 3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

Eph_2:1-7 , Eph_2:8-13 , Eph_2:14-22 ,Rom_5:1-2,Rom_3:25-28,Rom_4:5-10,Rom_4:11-16, Rom_3:26-31,Rom_6:14-17 ,Gal_2:15-20, Rom_11:1-6, 2Co_8:9, Eph_1:6-7 ,2Ti_1:9,Heb_4:12-16 ,Heb_12:27-28,Jam_4:5-9 ,Rom_5:19-21, Rom_9:11-18, Act_15:11, Tit_3:4-8,

5-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம்; ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காண்பதற்கு முதலாவது திறவுகோல்:-

5-1 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் மூலம்; ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை காண்பதற்கு முதலாவது திறவுகோல்:-

ஜலமாகிய தேவனுடைய வார்த்தைகளினால் ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ளுகிறவர்கள்/ தேவனுடைய ஆலோசனைகளை தங்கள் ஆத்துமாவில் ஏற்றுக் கொண்டு; தங்கள் மனிதனுடைய ஆலோசனைகளை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து, ஆத்துமாவில் மனந்திரும்புகிறவர்களுக்கு ஆவிக்குரிய கண் பார்வை கிடைக்கிறது.

தேவனுடைய இராஜ்ஜியம் இதோ இங்கே இருக்கிறது, அதோ அங்கே இருக்கிறது என்று , யாரையும் பின்பற்ற வேண்டாம், அல்லது எந்த இடத்திற்கும் ஓட வேண்டாம்; நீங்கள் இருக்கிற இடத்திலிருந்தே

தேவனுடைய இராஜ்ஜியத்தை உங்கள் ஆவிக்குரிய கண்களால் பார்க்க முடியும்..

Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12, Mar_9:1, Luk_9:24-27 ,Joh_3:3, Luk_17:20-23,Tit_3:5, 1Pe_1:23,1Pe_3:21,

ஆனால் இந்த கடைசி காலத்தில், பழைய/புதிய ஏற்பாட்டில் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருந்த பாழாக்குகிற அருவருப்பு /தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம்; தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் பரிசுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறது**.**

தேவனுடைய ஆலயமாகிய இருதயம்/ பரிசுத்த ஸ்தலம் பரிசுத்தக் குலைச்சலாக்காமல், இருப்பதற்கு பின்பற்ற வேண்டிய கிரியைகளின் தொடர்புடைய: அன்றாடபலி மற்றும் ஓய்வுநாள் தகனபலி, ஆகிய வேத வசனங்களின் பொருளடக்கம் பின்பற்றப்படாமல்;

கிறிஸ்தவ மதத்தின், ஏழுபலத்த /பெரிய சபைகளின் பிரிவினைகளையும் மார்க்க பேதங்களையும் பின்பற்றுகிற ஜனங்களால் உருவாக்கப்பட்ட சபையின் மூல உபதேச வசனங்கள்; /கலப்படமான ஞானப்பால் தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில்/ பரிசுத்த ஸ்தலத்தில்: தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகமாக / பாழாக்குகிற அருவருப்பாக நின்றுகொண்டிருக்கிறது.

5-2 மாயக்காரராகிய வேதபாரகர்கள்/ பரிசேயர்கள்/ நியாயசாஸ்திரிகள், பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிற முதலாவது திறவுகோல்:-

மாயக்காரராகிய வேதபாரகர்கள்/ பரிசேயர்கள்/ நியாயசாஸ்திரிகள், மனுஷர்: பரலோக இராஜ்ஜியத்தின் அறிவாகிய தரிசனங்களை கண்டு, அறிந்து உணர்ந்து கொள்ளாமல், இருப்பதற்காக பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறார்கள்.

Mat 23:13 மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.

Luk 11:52 நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும்

உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள் என்றார்.

கிறிஸ்தவ மதத்தின்: ஏழுபலத்த /பெரிய சபைகளின் பிரிவினைகளையும் மார்க்க பேதங்களையும் பின்பற்றுகிற மாயக்காரராகிய வேதபாரகர்கள்/ பரிசேயர்கள்/ நியாயசாஸ்திரிகள்/, ஜனங்கள் : ஜலத்தினால்/ தேவனுடைய வார்த்தைகளினால் ஆத்துமாவில் மறுபடியும் பிறந்து மனந்திரும்பாமல்,

தேவனுடைய வார்த்தையாகிய அப்பங்களுக்கு, தங்களுடைய இருதயம் தூரமாக விலகியிருந்துகொண்டு, அவைகளை தங்களுடைய வாய்க்கு மட்டும் சமீபமாக வைத்திருந்து பேசும்போது: தங்களுடைய மாயக்காரனுடைய ஆத்துமா வளச்சியடைய, மனுஷரால் போதிக்கப்பட்ட சபையின் மூல உபதேச வசனங்கள்/ கலப்படமான ஞானப்பால்லாக வெளிப்படுகிறது .

1. இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை அறிக்கைசெய்தல். Rom_10:5-13,

2. பாவமன்னிப்பிற்கு இரட்சிப்பைபெற்றுக்கொள்ளுதல். Act_2:38,

3. ஞானஸ்தானம் பெற்றுக்கொள்ளுதல். Mar_16:16 ,

4. அந்நிய பாஷையைப் பெற்றுக்கொள்ளுதல். . Act_2:1-4,

5. சபை ஐக்கியத்தில் கலந்து கொள்ளுதல். Heb_10:25,

6. காணிக்கை,தசமபாகம் செலுத்துதல் Mal_3:8-10,

7. பரிசுத்த பந்தியில் கலந்து கொள்ளுதல். 1Co_11:23-27;

8. தேவனுடைய ஊழியத்தில் பங்கு பெறுதல். Mar_16:15 ,

5-3 கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களாகிய களங்கமில்லாத ஞானப்பாலும், பலமான ஆகாரமாகிய தேவனுடைய நீதியின் வசனங்களும்:-

ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் மனந்திரும்பி, ஆத்துமாவில் மறுபடியும் பிறந்தவர்களுடைய ஆவிக்குரிய மனிதன் வளர்ச்சியடைய; கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்/ களங்கமில்லாத ஞானப்பால்:-. 1Pe_2:2-3, Heb_6:1-2, Heb_5:12-14,

காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும்

உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங் களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். Heb 5:12-14

1 செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல்,

2 தேவன் பேரில் வைக்கும் விசுவாசம்,

3 ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்,

4 கைகளை வைக்குதல்,

5 மரித்தோரின் உயிர்த்தெழுதல்,

6 நித்திய நியாயத் தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வசனத்திற்கு கடந்து போவோமாக. Heb 6:1-2

7 பூரண வயதுள்ளவர்களுக்கு பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வசனம் / பிரமாணம் Heb 5:12-14

நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கு பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வசனங்கள் Heb 5:12-14

8. நீதியின் வசனத்தின் ஊழியத்தில் பங்கு பெறுவதற்காக**,** பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் வார்த்தை**;** உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது**:-** Heb_5:12-14, Heb_6:1-2 Rom_10:6-10 Deu_30:11-16

விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்?

என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி; இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன்

வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. Rom 10:6-11 Rom_10:6-11, Deu_30:11-14, Jer_12:2; Eze_33:31; Mat_7:21;

6-0 பலமான ஆகாரமான தேவனுடைய நீதியின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசுகிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்:-

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விசுவாச வார்த்தையை தங்கள் வாயினால் அறிக்கைசெய்து, தேவனுடன் உடன்படிக்கை செய்துகொண்ட யாவருக்கும்: இயேசுகிறிஸ்துவின் விசுவாச வார்த்தையினுடைய சுவிசேஷம் / இயேசுகிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் பிரமாணங்கள்.

Rom_1:16, Rom_12:6, Hab_2:1-4, Mat_24:14, Mar_13:10, Joh_1:12, Gal_3:26, Exo_19:5, Joh_10:1-13,Rom_4:5, Joh_9:31,

1 நான் என் காவலிலேதரித்து :- என் இருதயத்தில் எல்லா காவலுடன் நான் இயேசுகிறிஸ்துவின் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு. Pro_4:23, 1Co_16:13, Col_1:22-23,

2 அரணிலே நிலைகொண்டிருந்து :- தேவன் எனக்கு பகிர்ந்த விசுவாச அளவுப் பிரமாணத்தில் நிலைகொண்டிருந்து, 2Co_10:14; Mat_25:15; Rom_12:3-6, Rom_15:20; 1Co_12:11-12; Eph_4:7-13; 1Pe_4:10-11, 1Co_4:6-7, 1Co_12:4-11, 1Co_12:28-31, Hab_2:1-4,

3 அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும்:- தேவன் தம்முடைய அழைப்பின் எந்த சித்தத்தை செய்ய சொல்லுவாரென்றும் கவனித்துப்பார்ப்பேன். Rom_12:2-6, Eph_1:10, Eph_5:17, Col_4:12, Act_9:6, Phi_2:13,

4 தேவன் என்னை கண்டிக்கும் போது நான் என்ன உத்தரவு சொல்லுவேனென்றும், கவனித்துப்பார்ப்பேன்;- தேவன் என்னை

கண்டிக்கும்போது நான் கடிந்துகொள்ளுதலை அலட்சியம் செய்யமாட்டேன், என்னை சீர்திருத்தும்படி கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ளுவேன். Psa_141:5, Pro_13:8, Pro_15:5, Pro_15:31-32, Pro_21:20, Pro_29:15, Tit_1:14, 2Ti_3:15-17,

5 தரிசனத்தை எழுதி :- தேவனுடைய கற்பனைகளை என் இருதயத்தில் எழுதி. Hab_2:2, Deu_6:4-9, Psa_37:31, Pro_3:1-9, Rom_2:14-15, Rom_2:27,

6 குறித்தகாலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது:- கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தொடர்புடைய கடைசி காலத்திற்குத் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. Dan_7:21, Dan_8:17, Dan_12:9, Rev_1:3, Rev_10:6, Rev_11:18, Job_24:1, Mat_16:3, Luk_12:56, Ecc_8:5-6,

7 முடிவிலே அது விளங்கும் அதுபொய் சொல்லாது:- தீர்க்கத்தரிசன நிறைவேறுதல்களில் அது விளங்கும். 1Co_3:13, 2Co_11:15, Mat_24:13

8 அது தாமத்தாலும் அதற்கு காத்திரு:- அது நிச்சயமாகவே வரும் அது தாமதிப்பதில்லை. Pro_23:18, Gen_49:18, Isa_40:18, Isa_49:18, Isa_49:23, Isa_64:4, Psa_42:11, Psa_43:5,

7-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடைய சுவிசேஷத்தின் கிரியைகளுடைய பிரமாணங்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விசுவாச வார்த்தையை தங்கள் வாயினால் அறிக்கைசெய்து, தேவனுடன் உடன்படிக்கை செய்துகொண்ட யாவருக்கும்: இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடைய சுவிசேஷத்தின் கிரியைகளுடைய பிரமாணங்கள்.

1 இயேசுகிறிஸ்துவின் விசுவாச சுவிசேஷத்தின் ஆரம்பம்:-

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு. Joh_1:12, Gal_3:26, Rom_4:1-10, Joh_9:31, Joh_10:1-13, Rom_3:24-28,Tit_3:5, Eph_5:26, Eph_2:8-9, Gal_3:2-7, Gal_5:4-6, Rom_11:6,

2 இயேசுகிறிஸ்துவின் விசுவாசத்தால் நீதிமான் ஆவியின் கிரியைகளில் பிழைப்பான் :-

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால், மாம்சத்தின் கிரியைகளை அழித்தால்; விசுவாசத்தில்ஆவியின் கிரியைகளில் பிழைப்பான். Rom_1:17, Rom_8:1-4, Rom_8:5-11, Heb_10:36-39,

3 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தின் ஆவியில் பின்வாங்கிபோகுதல் :-

கிறிஸ்து இயேசுவின் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு, மாம்ச இச்சையின் கிரியைகளை ஆவியில் ஜெயங்கொள்ள முடியாதவர்கள்: மீண்டும் மாம்ச இச்சைக்கு அடிமைப்பட்டவர்கள். Rom_8:5-6, Rom_8:13, Pro_14:14, Luk_8:13, 1Ti_6:9-12, Joh_6:51-66,

4 இயேசு கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியின் கிரியைகளின் வகைகள்:-

தேவன் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார். Rom_9:2, Rom_12:2-6, 1Co_12:12 1Co_12:13-27, 1Co_15:38, 1Ti_2:20-21, Eph_4:1-13, Eph_4:13-25, Eph_2:17-22, Col_2:18-22, Phi_2:13, Act_9:6, 1Pe_4:10,

5 ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணம்:- 2Co_10:12-18, Rom_12:2-6, Eph_4:7, Eph_4:13, Eph_4:16,

6 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தில் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணுதல்:- Hab_2:4-6, Eze_36:5, Mal_3:13-18, Mal_4:1-6, 2Ti_2:9, Isa_65:5, Isa_66:17, Psa_83:12, Deu_19:14, Deu_27:17, Amo_6:6-7, Amo_6:13, Hos_8:4, Luk_14:7-11,

7 இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினால் ஆவியின் கிரியைகள் இல்லாதவர்கள்:-

கர்த்தராகிய இயேசுவை அறிக்கை செய்து, விசுவாசத்தை ஏற்றுக் கொண்டவர்கள்; கிறிஸ்துவின் ஆவியின் கிரியைகள் இல்லாதபடியால்; ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

Rom_2:10-15, Gal_2:16-21,Gal_5:1-4; Rom_9:28-33; Rom_3:20-24,Tit_1:15-16,Act_7:39-43,Mat_25:24-30; Luk_19:11-17, Luk_19:18-25, Luk_19:26-27;

Tit 3:4 நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது,

Tit 3:5 நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

Tit 3:6 தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக,

Tit 3:7 அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

Tit 3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.

Jam_2:14-16, Jam_3:17-18, Mar_16:16, Joh_3:18, Joh_3:36, Joh_6:64, Jud_1:5, Tit_3:8, 1Jo_2:3-6, 1Jo_5:10, Rev_20:12, Rom_4:1-4, Jam_2:17-18 , ,Jam_2:20-26 Jam_2:8-14,2Th_1:12, 2Th_2:16-17,Tit_2:10-14, Tit_3:5-8, Heb_12:15-16, Rom_15:18, 2Co_10:11, Col_3:17, 1Jo_3:18,Rom_2:7,Act_26:20, Mat_5:16, Mat_23:2-3 , 1Ti_5:10,1Ti_5:24-25,Jam_3:13,1Pe_2:12,1Pe_4:16-19,Rev_2:5, Rev_2:19 ,Rev_2:26, Rev_2:23, Rev_3:1-2 , Rev_14:13, Rev_20:13,

8-0 இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழி முறைகள்:-

Mat 5:17 நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.

Mat 5:18 வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Mat 5:19 ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன்

என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.

Mat 5:20 வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Rom 7:22 உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்.

Rom 7:23 ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.

Rom 7:24 நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?

Rom 7:25 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.

Rom 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.

Rom 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

Rom 8:3 அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

Rom 8:4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.

Mat_5:1-10, Mat_5:11-20, Mat_5:21-26, Mat_5:27-35, Mat_5:36-40, Mat_5:41-48, Mat_6:1-8;Mat_6:9-16;Mat_6:17-24;Mat_6:25-30;Mat_6:31-34;Mat_7:1-8, Mat_7:9-15,

Mat_7:16-22, Mat_7:23-29, Mat_5:17-20; Rom_5:14-17 ,Gal_3:20-25,Rom_7:22-25;Rom_8:1-4; 1Pe_3:16-21, 1Pe_4:1-6, Heb_9:14-17, Act_13:38-39; Gal_3:10-13, Gal_4:4-5; Heb_10:3-9,Psa_40:6-8; Rom_10:1-5;Rom_2:10-15, Eph_2:13-18,Heb_2:12-16, Heb_5:5-10,Heb_10:16-23,

9-0 தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்; நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்:-

தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்: மாம்சத்திலே பாவத்தைப் பலிசெலுத்துகிறபோது, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டு, நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் வழிமுறைகள்.

ஒரு மனிதன், தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு: தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் வரை, தொடர்ந்து வந்துகொண்டிருந்த பாவம்/ மரணம்/சாபங்கள்,

ஆகியவைகள் மனிதனின் மேல் இருந்த கடன்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி; நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே தேவன் நம்மை இரட்சித்தார்.

ஆகையால் தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்:

அவைகளுக்கு விரோதமாய்ப் போராடுகிற, வேறொரு பிரமாணத்தை தங்கள் அவயவங்களில் இருக்கிறதை உணர்ந்து கொண்டு; அது தங்களுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு, தங்களை சிறையாக்கிக் கொள்ளுகிறபோது: ( Rom 7:23 Rom 8:1-4 )

தேவனே, மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி; மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

அதுபோல, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில்; நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கு சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று: தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்;

இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகவும்/பலியாகவும்/ காணிக்கையாகவும் தேவன் அங்கிகரிக்கிறார். நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். Rom 12:1-2

தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்: நன்மைசெய்தால் மேன்மை உண்டு, நன்மைசெய்யாதிருந்தால் அவனுடைய பாவம், பலி மிருகமாக அவனுடைய இருதய வாசற்படியிலே படுத்திருக்கும்;

அவனுடைய பாவத்தை/பாவ மிருகமாகிய மாம்சத்தை/ஜென்ம பாவ மனிதனை/ அவனுடைய பாவ சரீரத்தை, அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி:அவனுடைய பாவ மாம்சத்திலே, அவனே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதின் மூலம், கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால்; பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளை பின்ப்பற்றி, நியாயப்பிரமாணத்தின் நீதியை மனிதனே நிறைவேற்றுகிறபடியால்: தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறான்

ஒருவனுடைய பாவ சரீரத்தை, அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி: அவனுடைய பாவ மாம்சத்திலே, பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் இருக்கிறபோது; அவனுடைய இருதய வாசற்படியில் பாவம் மிருகமாக படுத்திருக்கும். அந்த பாவமிருகம், அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து அவனை அடிமைப்படுத்தி அவனை ஆட்சி செய்யும்.

ஒருவன் பாவத்தை பலிசெலுத்தினால், அவன் பாவத்தை அவனே அடிமைப்படுத்தி, அவனே பாவத்தை ஆட்சி செய்ய முடியும். அவன் பாவத்தை பலிசெலுத்தாமல் இருக்கிறபோது; பாவ மிருகம்

அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து, அவனை அடிமைப்படுத்தி, அவனுடைய பாவ மிருகம் அவனை ஆட்சி செய்யும்.

Gen 4:6 And Jehovah saith unto Cain, `Why hast thou displeasure? and why hath thy countenance fallen?

**Gen 4:7** Is there not, if thou dost well, acceptance? and if thou dost not well, at the opening a sin-offering is crouching, and unto thee its desire, and thou rulest over it.'

Gen 4:6 அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?

Gen 4:7 நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

1Pe 4:14 நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.

1Pe 4:15 ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது.

1Pe 4:16 ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.

1Pe 4:17 நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?

1Pe 4:18 நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?

1Pe 4:19 ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய்த் தங்கள்

ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

1Pe 3:16 கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்.

1Pe 3:17 தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.

1Pe 3:18 ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

1Pe 3:19 அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்.

1Pe 3:20 அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.

1Pe 3:21 அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது;

1Pe 3:22 அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

Rom_8:1-4;1Pe_3:16-21, 1Pe_4:1-6, 1Pe_2:19-25, 1Pe_4:16-19, Heb_6:13-20, Heb_10:19-22, Heb_9:8-15, Heb_13:9-13; Rom_2:10-15, Gal_2:20-21,Gal_5:1-6,Gal_6:12-18;Col_2:11-14 Gal_5:14-18, Gal_5:19-26, Rom_6:1-8, Rom_6:9-13, Col_2:13-19, Col_2:20-25, Col_3:3-4,

10-0 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள்: பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு: இரண்டாவது திறவுகோல், ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது :-

10-1 பரலோக இராஜ்ஜியத்தின் தரிசனங்களை கண்டவர்கள்: பரலோக இராஜ்ஜியத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு இரண்டாவது திறவுகோல்; ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறப்பது :-

ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆத்துமாவில் மனந்திரும்பி மறுபடியும் பிறந்தவர்களுடைய ஆவிக்குரிய மனிதன்: கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களினால்; தீமையை வெறுத்து, நன்மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைகிறது.

கிறிஸ்துவின் மூல உபதேச வசனங்களினால், நீதியின் கிரியைகளை செய்து, தங்களுடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து : புத்தியுள்ள ஆராதனையை நிறைவேற்றின பின்பு; தன்னுடைய ஜென்ம பாவ மனிதனின் ஆவியை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து: பரிசுத்த ஆவியுடன் உடன்படிக்கை செய்து, பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்போது; அவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உள்ளே பிரவேசிக்கிறான், அல்லது அவனுக்குள்ளே தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது.

Joh_3:3-5, Heb_5:12-14, Mat_16:24-28, Joh_3:5, Mat_12:28, Luk_11:20, Jam_1:17-18, Tit_3:5,

10-2 கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களினால் நீதியின் கிரியைகள் இல்லாமல்: கண்சொருகிப்போன குருடர்கள்:-

ஜலத்தினால்/கிறிஸ்துவின் நித்திய ஜீவ வார்த்தைகளினால் ஆத்துமாவில் மனந்திரும்பி மறுபடி பிறந்தும், பரிசுத்த ஆவியினால் மறுபடி பிறந்தும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரகசியங்களுக்குள்ளே பிரவேசிக்கிறவர்களுக்கு: தேவ நீதியின்படி நற்கிரியைகள் இல்லாதபோது; தேவனுடைய இராஜ்ஜியத்தின் தரிசனங்களை இழந்து, மீண்டும் ஆவிக்குரிய குருடர்களாக மாறுகிறார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு தேவனுடைய

இராஜ்ஜியத்தின் வழிகளை காட்டும்போது, குருடனுக்கு வழி காட்டுகிற குருடனாக இருக்கிறார்கள். 2Pe_1:4-11, 2Pe_2:20-22; Heb_6:4-8; Heb_10:26-31 Mat_22:8-14,Joh_1:31, Joh_3:23, Luk_7:29-30, Mar_16:16, Luk_3:7, Luk_3:12,

10-3. கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களினால்/ ஜலத்தினால் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்து; தேவனுக்கு முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்து, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்: தேவ ஆசீர்வாதங்களை பெற்று, தேவனுக்கு முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்படுவதற்காக, சிலருடைய ஜென்ம பாவ மனிதன் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் கொல்லப்படுகிறது; மேலும் சிலர் தாங்களாகவே, கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு ; தங்களுடைய ஜென்ம பாவ மனிதனை சிலுவையிலே அடித்து கொலை செய்து, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய முதற்பலனாகும்படி போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று பரிசுத்த கற்பனைகளுக்கு கீழ்படியாமல் பின்வாங்கும்போது: தேவனுடைய சாபங்கள் இவர்களை பின்தொடரும், இந்த சாபங்களிலிருந்து வெளியே வரும்படி, உள்ளான ஆவிக்குரிய மனிதன்; பரிசுத்த கற்பனைகளின் நற்கிரியைகளை செய்யும்படி கட்டாயப்படுத்தப் படுகிறான்.

ஜென்ம பாவ மனிதனின் நற்கிரியைகளுக்கேற்றபடி, தன் பாவங்களிலிருந்து வெளியே வந்து; மீண்டும் தேவனை தொழுது கொண்டு, தன் மேல் இருக்கிற சாபங்களிலிருந்து விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ளுகிறான். .Lev_26:1,D eu_28:1,

11-0 முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் மூலம்; தேவன் கிருபையினால், தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

Eph 4:7 கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

Eph 4:8 ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

Eph 4:9 ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

Eph 4:10 இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

Eph 4:11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்,

Eph 4:12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

Eph 4:13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

Eph 4:14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

Eph 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

Eph 4:16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

2Co 10:12 ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு,

தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

2Co 10:13 நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மைபாராட்டாமல், உங்களிடம்வரைக்கும் வந்தெட்டத்தக்கதாக, தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுகிறோம்.

2Co 10:14 உங்களிடத்தில் வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை; நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடம் வரைக்கும் வந்தோமே.

2Co 10:15 எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மைபாராட்டமாட்டோம்.

2Co 10:16 ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது, மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

2Co 10:17 மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

2Co 10:18 தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.

Rom_1:16, Rom_12:1-6, Hab_2:1-4, Rom_8:1-4;1Pe_3:16-21, 1Pe_4:1-6,Eph_4:7-13, 1Co_12:1-7, Act_14:3,Act_20:24, Act_20:32, Rom_15:14-16,1Co_3:9-10, Rom_1:5-7, 1Co_15:9-10 , Gal_1:14-17,Gal_2:8-10, Eph_3:1-2,Eph_3:7-8 ,1Pe_4:10,Eph_4:30-32,2Co_11:12-15, 1Co_3:9-10, 1Co_15:9-10; 2Co_6:1-3; Eph_3:6-8,

12-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் கிரியைகள் இல்லாதபோது: அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட இரட்சிப்பு: இடறி விழுந்து மரணமடைகிறது.

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி: கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.

Rom_2:10-15, Gal_2:16-21,Gal_5:1-4; Rom_9:28-33; Rom_3:20-24,Tit_1:15-16,Act_7:39-43,Mat_25:24-30; Luk_19:11-17, Luk_19:18-25, Luk_19:26-27;

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு: கிரியைகளின் மூலம் வெளிப்படாமல், கிருபையினால் வெளிப்படுத்தப்படுகிறது; என்பதை விசுவாசிக்கிறவர்கள்; இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள்.

Rom_4:4, Rom_2:10-15, Gal_2:16-21,Gal_5:1-4; Rom_9:28-33; Rom_3:20-24,Tit_1:15-16 , Act_7:39-43,Mat_25:24-30; Luk_19:11-17, Luk_19:18-25, Luk_19:26-27;

இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் முடிவு: கிருபையினால் வெளிப்படாமல், கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. Heb_12:2, Exo_19:5, 2Th_2:3-8, 2Ti_2:12, Rev_1:8, Rev_21:6, Rev_22:13,

1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் இயேசுகிறிஸ்துவின் விசுவாச துரோகிகளின் மேல்; தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார். Zec_11:5, Zec_11:8-10, 2Ti_2:12, Mal_2:1-10, Pro_2:16-17,

2 கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை, தங்கள் வாழ்க்கையின் முடிவுவரை காத்திருந்து, இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளாமல்; பாதியிலே உடன்படிக்கையை முறித்தபடியால்: தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து, மரணமடைகிறார்கள். Mat_10:22 Mat_24:13, Mar_13:13, Rev_2:26,

3 சத்தியத்தின் மேல் உள்ள அன்பை அங்கீகரித்து: தங்களுடைய விசுவாச உடன்படிக்கையையும், ஆவிக்குரிய வாழ்க்கையும் , காத்துக்கொள்ளாமல் போனபடியால்; தேவனுடைய நியாயத்தீர்ப்பு . வெளிப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள். .2Th_2:9-10, Dan_8:11-12,

4 அக்கிரமத்தின் மிகுதியினால், விசுவாச உடன்படிக்கை செய்த அநேகருடைய அன்பு தணிந்து, விசுவாசத்தை இழந்து போனபடியால்: தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு; இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள். Mat_24:12, 2Th_2:1-6, 2Th_2:7-12, 2Th_2:13-17 , Heb_13:9-12,2Pe_2:1-2, Joh_14:12 ,

5 இயேசுகிறிஸ்துவின் மூலம் விசுவாச உடன்படிக்கை செய்த நாளில், மரணமடைந்த கேட்டின் மகனாகிய பாவமனிதன்; மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, பாவகிரியைகளின் மூலம் வெளிப்படும்போது: அவனுடைய விசுவாச உடன்படிக்கை, அவனால் முறிக்கப்படுகிறது; ஆகையால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள். Rom_6:2-11, Rom_8:9-14, Col_2:11-12, 2Th_2:3, Eph_4:22-24,

6 இயேசுகிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையை நிலைநிறுத்துகிற பரிசுத்த ஆவி, தேவனால் நீக்கப்படும்போது; தேவன் அந்த ஜனங்களுடன் செய்த உடன்படிக்கையை முறித்துப் போடுகிறார்; ஆகையால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள். Zec_11:5, Zec_11:8-10,2Ti_2:12,

7 தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, இரட்சிப்படைய விரும்பாதபடியால், பொய்யை விசுவாசிக்கும்படி: பரிசுத்த ஆவிக்கு பதிலாக, வஞ்சக ஆவியை தேவன் அவர்களுக்குள்ளே நியாயத் தீர்ப்பாக அனுப்புகிறார்; ஆகையால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையின் இடறி விழுந்து மரணமடைகிறார்கள். 2Th_2:11-12, 1Sa_16:14, 1Sa_16:16, 1Sa_16:23,

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் இடறி விழுந்து, மரணமடைந்த விசுவாச துரோகிகள்/ கள்ளதீர்க்கதரிசிகள்/ கள்ள அப்போஸ்தலர்கள்/ அந்திக்கிறிஸ்துக்கள் ஆகியவர்களிடம் வெளிப்படுகிற வஞ்சிக்கிற ஆவிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். உங்களது ஆவிக்குரிய மனிதன் உங்கள் மூலம் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

Psa_49:20 ,Pro_19:2-3, Hos_4:6, Isa_5:13, Isa_55:1-2, 1Co_3:18, Gal_6:3-4, Col_2:4, Col_2:18-19, 1Th_4:4-8, Heb_3:12-14, Eph_4:14-16, Pro_23:29-33, Eze_33:13,

13-0 இயேசு கிறிஸ்துவின் விசுவாச உடன்படிக்கையில் இடறி விழாமல், கிருபையினுடைய நீதியின் கிரியைகளின் மூலம்; சத்தியத்தினால் பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளுக்கு முன்னேறுதல்:-

ஒரு மனிதன், தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு, தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் வரை; தொடர்ந்து வந்துகொண்டிருந்த பாவம்/ மரணம்/சாபங்கள்,ஆகியவைகள்: மனிதனின் மேல் இருந்த கடன்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே தேவன் நம்மை இரட்சித்தார்.

ஆகையால், தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்: அவைகளுக்கு விரோதமாய்ப் போராடுகிற, வேறொரு பிரமாணத்தை தங்கள் அவயவங்களில் இருக்கிறதை உணர்ந்து கொண்டு; அது தங்களுடைய சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு தங்களை சிறையாக்கிக் கொள்ளுகிறபோது:( Rom 7:23  Rom 8:1-4 )

தேவனே மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

அதுபோல, மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில், நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கு: சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று;

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாகவும்/பலியாகவும்/ காணிக்கையாகவும் தேவன் அங்கிகரிக்கிறார்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். Rom 12:1-2

தேவனுடைய கிருபையினாலே இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள்/ கிறிஸ்து

இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை தங்களுடைய மனதிலே பெற்றுக்கொண்டவர்கள்: நன்மைசெய்தால் மேன்மை உண்டு, நன்மைசெய்யாதிருந்தால், அவனுடைய பாவம், பலி மிருகமாக அவனுடைய இருதய வாசற்படியிலே படுத்திருக்கும்;

அவனுடைய பாவத்தை/பாவ மிருகமாகிய மாம்சத்தை/ஜென்ம பாவ மனிதனை/ அவனுடைய பாவ சரீரத்தை, அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி; அவனுடைய பாவ மாம்சத்திலே அவனே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதின் மூலம்:

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தினால், பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளை பின்பற்றி; நியாயப்பிரமாணத்தின் நீதியை, மனிதனே நிறைவேற்றுகிறபடியால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறான்.

மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறின பின்பு / இருதய வாசற்படியில் படுத்திருக்கும் ஜென்ம பாவ மனிதனை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த பின்பு/ தீமையை நன்மையாக மாற்றிய பின்பு/ நியாயப்பிரமாணத்தின் நீதிக்கு விரோதமாக வருகிற பாவங்கள் நிவிர்த்தியான பின்பு /

நன்மையாகிய தேவனுடைய சத்திய வசனங்களின் பிரமாணங்களை நிறைவேற்றுகிறபோது; சத்தியத்திற்கு விரோதமாக வருகிற பாவங்கள் தேவனுடைய நியாயத்தீர்பினால் நிவிர்த்தியாகிறது.

நியாயப்பிரமாணத்தின் நீதிக்கு விரோதமாக வருகிற பாவங்களை நிவிர்த்தி செய்யாமல், நன்மையாகிய தேவனுடைய சத்திய வசனங்களின் பிரமாணங்களை நிறைவேற்றுகிறபோது: சத்தியத்திற்கு விரோதமாக வருகிற பாவங்கள் நிவிர்த்தி செய்ய முடியாது; மேலும் தேவனுடைய சத்தியத்தின் வசனங்கள் தேவன் அனுப்பின நியாத்தீர்ப்பை நிறைவேற்றும்.

ஒருவனுடைய பாவ சரீரத்தை, அவனுடைய பாவத்தைப் போக்கும் பலியாக செலுத்தி, அவனுடைய பாவ மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காமல் இருக்கிறபோது; அவனுடைய இருதய வாசற்படியில் படுத்திருக்கும் அந்த பாவமிருகம் , அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து, அவனை அடிமைப்படுத்தி, அவனை ஆட்சி செய்யும். ஒருவன் பாவத்தை பலிசெலுத்தினால், அவன் பாவத்தை அவனே அடிமைப்படுத்தி, அவனே பாவத்தை ஆட்சி செய்ய முடியும். அவன் பாவத்தை பலிசெலுத்தாமல் இருக்கிறபோது; பாவ

மிருகம் அவனுடைய இருதயத்திற்குள்ளே பிரவேசித்து, அவனை அடிமைப்படுத்தி ,பாவ மிருகம் அவனை ஆட்சி செய்யும்.

Gen 4:6 And Jehovah saith unto Cain, `Why hast thou displeasure? and why hath thy countenance fallen?

Gen 4:7 Is there not, if thou dost well, acceptance? and if thou dost not well, at the opening a sin-offering is crouching, and unto thee its desire, and thou rulest over it.'

Gen 4:6 அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?

Gen 4:7 நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.

Php 3:9 நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,

Php 3:10 இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,

Php 3:11 அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

Php 3:12 நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

Php 3:13 சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி,

Php 3:14 கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

Php 3:15 ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

Rom_8:1-4;1Pe_3:16-21, 1Pe_4:1-6, 1Pe_2:19-25, 1Pe_4:16-19, Phi_3:9-14;Isa_26:1-9; Col_1:5-6,Tit_1:1-4, Heb_6:13-20, Heb_10:19-22, Heb_9:8-15, Heb_13:9-13; Rom_2:10-15, Gal_2:20-21,Gal_5:1-6,Gal_6:12-18;Col_2:11-14 Gal_5:14-18, Gal_5:19-26, Rom_6:1-8, Rom_6:9-13, Col_2:13-19, Col_2:20-25, Col_3:3-4,

14-0 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; கிருபையிலிருந்து தேவனுடைய சத்தியத்தினாலே உண்டாகிற இரட்சிப்பு ஆரம்பமாகிறது:-

14-1 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; தேவனுடைய சத்திய ஆவி வெளிப்படுகிறது:-

14-2 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; சத்திய வசனங்களை கர்ப்பத்தரித்து, முதற்பலனாகிய ஆண்பிள்ளையாக பிறக்கிறார்கள்.

14-3 கிறிஸ்து இயேசுவினாலே, ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கிரியைகளில் இடறி விழுகிறவர்கள்; சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை தூபங்காட்டி, ஆராதணை செய்து வருகிறார்கள்:-

14-4 சர்ப்பமானது, மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்/ மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவும் உயர்த்தப்பட்டு; தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறார்கள்.

14-5 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை; தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறார்கள்.

14-6 பழைய ஏற்பாட்டில், தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற கன்றுக்குட்டியை கண்டு; கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

14-7 புதிய ஏற்பாட்டில், சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை/ கன்றுக்குட்டியை தூபங்காட்டி ஆராதனை செய்து வருகிறதை கண்டு; கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

14-1 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; தேவனுடைய சத்திய ஆவி வெளிப்படுகிறது:-

1Jn 4:1 பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.

1Jn 4:2 தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.

1Jn 4:3 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.

1Jn 4:4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.

1Jn 4:5 அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.

1Jn 4:6 நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன்

எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.

1Jn 4:7 பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.

1Jn 4:8 அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்.

1Jn 4:9 தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

1Jn 4:10 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.

2Jn 1:7 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்.

2Jn 1:8 உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

2Jn 1:9 கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்.

2Jn 1:10 ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்.

2Jn 1:11 அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.

1Jo_4:1-3;2Jo_1:7-11, Joh_3:14-16, Num_21:7-9; 2Ki_18:4; 1Ti_3:14-16, 1Jo_4:15, 1Jo_2:18-22, 2Co_5:14-16,Rom_10:5-13, Deu_30:11-15, Mat_10:32-33; Luk_12:8; Rom_14:8-11; Joh_9:22,Joh_12:41-43; Phi_2:11;

14-2 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிறபோது; சத்திய வசனங்களை கர்ப்பத்தரித்து, முதற்பலனாகிய ஆண்பிள்ளையாக பிறக்கிறார்கள்:-

Jas 1:16 என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.

Jas 1:17 நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

Jas 1:18 அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்.

2Th 2:13 கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

2Th 2:14 நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.

2Th 2:15 ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.

2Th 2:16 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்,

2Th 2:17 உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.

14-3 கிறிஸ்து இயேசுவினாலே, ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கிரியைகளில் இடறி விழுகிறவர்கள்; சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை, தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறார்கள்:-

மனிதனுக்கு தேவனுடைய இரட்சிப்பு, கிருபையினாலே ஆரம்பமாகிறது:-

ஒரு மனிதன், தேவனுடைய கிருபையினாலே, இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் வரை; தொடர்ந்து வந்துகொண்டிருந்த பாவம்/ மரணம்/சாபங்கள்,

ஆகியவைகள் மனிதனின் மேல் இருந்த கடன்களிலிருந்து நம்மை விடுதலையாக்கி, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே தேவன் நம்மை இரட்சித்தார்.

Eph 2:1 அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.

Eph 2:2 அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.

Eph 2:3 அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

Eph 2:4 தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,

Eph 2:5 அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.

Eph 2:6 கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக,

Eph 2:7 கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

Eph 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

Eph 2:9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;

Eph 2:10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

Eph_2:1-7 , Eph_2:8-13 , Eph_2:14-22 ,Rom_5:1-2,Rom_3:25-28,Rom_4:5-10,Rom_4:11-16, Rom_3:26-31,Rom_6:14-17 ,Gal_2:15-20, Rom_11:1-6, 2Co_8:9, Eph_1:6-7 ,2Ti_1:9,Heb_4:12-16 ,Heb_12:27-28,Jam_4:5-9 ,Rom_5:19-21, Rom_9:11-18, Act_15:11, Tit_3:4-8,

மனிதனுக்கு தேவனுடைய இரட்சிப்பு கிரியைகளினாலே பூரணமடைந்து முடிவடைகிறது:-

Jas 2:14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

Jas 2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.

Jas 2:18 ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

Jas 2:19 தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

Jas 2:20 வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ?

Jas 2:21 நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?

Jas 2:22 விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.

Jas 2:23 அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்.

Jas 2:24 ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.

Jas 2:25 அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?

Jas 2:26 அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

Rom 4:4 கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.

தேவனுடைய இரட்சிப்பை கிருபையினாலே, விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொண்டு ஆரம்பித்தவர்கள்: கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தை விசுவாசித்து; பாவம் நிவிர்த்தியாகும் வழிமுறைகளை பின்பற்றி, நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிற கிரியைகளின் மூலம்: தேவனுக்கு முன்பாக நீதிமானாக முடியாதவர்கள்;

சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்து, என்னுடைய பாவங்களுக்காக மரித்து, நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றினார்; நான் அதை விசுவாசக்கிறதினால், தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறேன்: என்று தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் கிரியைகள் இல்லாமல்: விசுவாசத்திலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக மாறுகிறவர்கள், தேவனிடத்தில் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் இடறி

விழுந்து, சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை தூபங்காட்டி, ஆராதனை செய்து வருகிறார்கள்.

Rom 2:13 நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்.

Joh 4:23 உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.

Joh 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

தேவனுடைய கிருபையினாலே, விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை பெற்றுக்கொண்டு ஆரம்பித்தவர்கள்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத, அநேக வஞ்சகர்கள் தேவனுடைய ஆவியில் மரணமடைந்தும், கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமல் மரணமடைந்தும், பிதாவை ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை செய்ய முடியாமல்; சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை, தூபங்காட்டி ஆராதனை செய்து வருகிறார்கள்.

Rom_2:10-15, Gal_2:16-21,Gal_5:1-4; Rom_9:28-33; Rom_3:20-24,Tit_1:15-16,Act_7:39-43,Mat_25:24-30; Luk_19:11-17, Luk_19:18-25, Luk_19:26-27;

14-4 சர்ப்பமானது, மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்/ மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவும், உயர்த்தப்பட்டு தூபங்காட்டி, ஆராதனை செய்து வருகிறார்கள்:-

சர்ப்பமானது, மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்/ மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவும் உயர்த்தப்படவேண்டும். இயேசு கிறிஸ்து இரண்டு நாளுக்கு/ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு; கிறிஸ்தவர்கள் அந்த வெண்கலச் சர்ப்பத்திற்குத் தூபங்காட்டி, ஆராதனை செய்து வருகிறார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டிருக்கிறார்கள்.

Joh 3:14 சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்,

Joh 3:15 தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.

Joh 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

Joh 3:17 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

Joh 3:18 அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

Joh 3:19 ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.

Joh 3:20 பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.

Joh 3:21 சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.

Num 21:5 ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்.

Num 21:6 அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்.

Num 21:7 அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணினான்.

Num 21:8 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்.

Num 21:9 அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.

2Ki 18:1 இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான்.

2Ki 18:2 அவன் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான்; சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் ஆபி.

2Ki 18:3 அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

2Ki 18:4 அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான்.

2Ki 18:5 அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.

2Ki 18:6 அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்.

2Ki 18:7 ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்.

14-5 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை, தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறார்கள்:-

Exo 32:1 மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள்.

Exo 32:2 அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான்.

Exo 32:3 ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள்.

Exo 32:4 அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்.

Exo 32:5 ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.

Exo 32:6 மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்.

Exo 32:7 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்.

Exo 32:8 அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்.

Exo 32:9 பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்.

Exo 32:10 ஆகையால் என் கோபம் இவர்கள் மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு; உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.

14-6 பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற கன்றுக்குட்டியை கண்டு, கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

பழைய ஏற்பாட்டில், தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் /தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள்: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற மோசேயின் சத்தத்தை கேட்டு, கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்.

பழைய ஏற்பாடு பரிசுத்த ஸ்தலத்தில்/தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தை / பாழாக்குகிற அருவருப்பை ஆராதனை செய்கிற, தேவனுடைய ஜனங்கள்; தங்கள் சத்துருக்களாகிய புறஜாதிகளுக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன்/ ஆரோனுடைய சந்ததியார்கள், அவர்களை நீதியினுடைய கிரியைகளின் வஸ்திரம் இல்லாமல் நிர்வாணமாக்கியிருந்தார்கள்.

தேவனுடைய ஜனங்கள் நிர்வாணமாயிருக்கிறதையும், அவர்களுடைய ஆராதனையின் பாடலின் சத்தம், ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; என்பதையும் உணர்ந்து கொண்டவர்கள்; கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை

பண்ணிக்கொண்டு; லேவி கோத்திரத்தின் மூலம் தேவனுடைய ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டு, தேவனுடைய நியாத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள். Exo 32:25-29,

14-7 புதிய ஏற்பாட்டில் சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை/ கன்றுக்குட்டியை தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறதை கண்டு; கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

புதிய ஏற்பாட்டில், சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை/ கன்றுக்குட்டியை தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறதை கண்டு/ புதிய ஏற்பாட்டில் தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்றுகொண்டிருக்கிறதை உணர்ந்து கொண்டவர்களுக்குள், கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்கிற தேவனுடைய சத்தத்தை கேட்டு: கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

புதிய ஏற்பாட்டில், சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை/ கன்றுக்குட்டியை தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிறவர்கள்; தங்களுடைய கிறிஸ்தவ மதத்தின் பிரிவினைகளோடு கலந்த மார்க்கபேதங்களுடைய சபையின் உபதேசங்கள்: பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நிற்றுகொண்டிருந்து தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் / பாழாக்குகிற அருவருப்பாக நின்றுகொண்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில், சரித்திர புருஷனாகிய மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை/ கன்றுக்குட்டியை தூபங்காட்டி ஆராதணை செய்து வருகிற கிறிஸ்தவர்களை, தங்கள் சத்துருக்களாகிய புறஜாதிகளுக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன்/ ஆரோனுடைய சந்ததியார்கள், அவர்களை நீதியினுடைய கிரியைகளின் வஸ்திரம் இல்லாமல் நிர்வாணமாக்கியிருக்கிறார்கள்.

Hos 13:1 எப்பிராயீம் பேசினபோது நடுக்கமுண்டாயிற்று; அவன் இஸ்ரவேலிலே மேன்மைபெற்றான்; அவன் பாகால் விஷயத்தில் குற்றஞ்செய்து மடிந்துபோனான்.

Hos 13:2 இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து, தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சுரூபங்களையும், தங்கள் புத்திக்கேற்க விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டுபண்ணுகிறார்கள்; இவைகளெல்லாம் தட்டாருடைய வேலை; மனுஷரில் பலியிடுகிறவர்கள் கன்றுக்குட்டிகளை முத்தமிடலாமென்று இவைகளைக்குறித்துச் சொல்லுகிறார்கள்.

Hos 13:3 ஆகையால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும், பெருங்காற்று களத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைப்போலவும், புகைக்கூண்டில் ஏறிப்போகிற புகையைப்போலவும் இருப்பார்கள்.

Hos 13:4 நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவந்ததுமுதல் உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிறேன்; ஆகையால் நீ என்னையன்றி வேறே தேவனை அறியவேண்டாம்; என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை.

Hos 13:5 நான் உன்னை மகா வறட்சியான தேசமாகிய வனாந்தரத்திலே அறிந்துகொண்டேன்.

Hos 13:6 தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்; திருப்தியானபின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று; அதினால் என்னை மறந்தார்கள்.

தேவனுடைய ஜனங்கள் நிர்வாணமாயிருக்கிறதையும், அவர்களுடைய ஆராதனையின்பாடலின் சத்தம்: ஜெயதொனியாகிய சத்தமும் அல்ல, அபஜெயதொனியாகிய சத்தமும் அல்ல; என்பதையும் உணர்ந்துகொண்டு; பரிசுத்த ஸ்தலத்தில்/ தேவனுடைய ஆலயமாகிய இருதயத்தில் நின்று கொண்டிருக்கிற பாழாக்குகிற அருவருப்பு /தேவனுக்கு எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகத்தின் நிமித்தம்:

தங்கள் இருதயத்தில் பெருமூச்சுவிட்டழுகிறவர்கள், கர்த்தருக்கு தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்டு, ஆவிக்குரிய யூதா கோத்திரத்தின் மூலம் தேவனுடைய ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டு, தேவனுடைய நியாத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள்.

இவர்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட, தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் பெற்றுக்கொண்டு; கிறிஸ்துவின்

இரகசிய வருகையில் பங்கடைகிற, மணவாட்டி சபையின் சீயோன் குமாரத்திகளாக 1,44,000. வரிசையில் தெரிந்து கொள்ளப்பட்டு; தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்ற ஆயத்தமாகிறார்கள்.

மற்றும் தேவனுக்கும் மனிதனுக்கும் மந்தியில் அடையாளமாக கொடுக்கப்பட்ட, தேவனுடைய ஏழு முத்திரை அடையாளங்களை தங்கள் நெற்றியில் /அறிவில் பெற்றுக் கொள்ளாதவர்களின்; தேவனுடைய இரட்சிப்பு மரணமடைகிறது, இவைகளைக் குறித்து; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான், ஞானவான்களோ உணர்ந்து கொள்ளுவார்கள். (எசேக்கியேல் 9:4-10, ஏரேமியா 25:29-30,ஏசாயா 66:6-9)

15-0 கிறிஸ்தவன், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைசெய்கிறபோது; தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறான்:-

15-1 தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறவர்களின் பிரதிபலன்கள்:-

15-2 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து விசேஷ இரட்சிப்பை ஏற்றுக் கொண்டவர்களின் ஆவிக்குரிய நிலமைகள்:-

15-3. இருதயத்தில் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து.

15-4. நித்திய ஜீவ வார்த்தைகளினால் நல்ல ருசியான விருந்து

15-5. நித்திய ஜீவ வார்த்தைகளினால் கடைசிகால இரட்சிப்பின் நற்செய்தி

15-6. சுய நீதியின் வஸ்திரம் / மறுதேசத்து ராஜகுமாரரின் வஸ்திரம் தரித்து விருந்து கொண்டாடுகிறவர்களின் பிரதிபலன்கள்.

15-1 தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறவர்களின் பிரதிபலன்கள்:-

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் உள்ள விசுவாசத்தில், தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைத்து, அவருடன் விசுவாச உடன்படிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை

பேர்களோ; அத்தனை பேர்களையும் இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, அவர் இராஜாவாக முடிசூட்டப்படும், தன்னுடைய பட்டாபிஷேக விழாவிற்கு அழைத்து, அவர்களுக்கு தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாகக் கொடுத்து, அவர்களின் கிரியை களின்படி பிரதிபலனை பரிசாக அளிக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர், இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களிள் ஒரு சிலர், இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில், மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை, பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

15-2 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளுடன் உடன்படிக்கை செய்து விசேஷ இரட்சிப்பை ஏற்றுக் கொண்டவர்களின் ஆவிக்குரிய நிலமைகள்:-

1 ஜலத்தினால் மறுபடியும் பிறப்பு/ தேவனுடைய வார்த்தைகளினால் மனம் மறுரூபம் அடைந்து, தேவனுடைய இராஜ்ஜியத்தை விசுவாசக் கண்களால் பார்ப்பது.

2. ஆவியினால் மறுபடியும் பிறப்பு / தேவனுடைய வார்த்தைகளினாலும் பரிசுத்த ஆவியினாலும், மனம் மறுரூபம் அடைந்து ,தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளே விசுவாசக் கண்களால் பிரவேசிப்பது.

3. மறுபடியும் பிறந்தவர்களுக்கு களங்கமில்லாத ஞானப்பால்/ மறுபடியும் பிறந்தவர்கள், ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைய; கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்கள்.

4. பலமான ஆகாரம்/ தீமையை வெறுத்து, நன்மையை அறிந்து கொள்ளும் அறிவில் பூரண வளர்ச்சியடைந்து நீதியின் வசனத்தை பகுத்தறியும் ஞானத்தை அடைதல்.

5. பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் / உவமைகளின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவதினால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிற தேவ சித் தத்தை / பங்களிப்பை அறிந்து கொள்ளுதல்.

6. தங்களுடைய விசுவாச உடன்படிக்கையில் நிலைத்திருந்து முன் னேறும் போது, அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தில் தேவனுடைய சித் தத்தையும், அதன் விசுவாச அளவுப் பிரமாணத்தையும்; அறிந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்.

7. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து/ இயேசு கிறிஸ்து, இராஜாவாக முடிசூடப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு. தேவனுடைய சத்தியமான வசனங்களை விருந்தாக புசித்து, தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆட்சியின் பதவியை பரிசாகப்பெற்று, அல்லேலூயா; என்று கெம்பீர சத்தத்தோடு ,ஆரவாரம் செய்து தேவனை மகிமைப்படுத்துதல்.

8. மரணத்தை ஜெயமாக விழுங்குதல்/தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து, அதன் கிரியைகளின் மூலம் அழிவுள்ளது அழியாமையையும், சாவுள்ளது சாவாமையும், தரித்துக் கொள்ளும்போது; மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு: இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால், தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர்; இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால், தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர், இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை: பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம், ஜெயங்கொள்ளுகிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு, பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன்; தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

15-3. தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து இருதயத்தில் நடைபெறுகிறது :-

இருதயத்தில் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை சிந்தித்து தியானித்து ஏற்றுக்கொள்ளுதல்

Rev 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

Rev 19:9 பின்னும், அவன் என்னை நோக்கி : ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவ னுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

Isa_64:6, Rev_22:14, Heb_5:12-14, Amo_5:14, Gen_1:16-17, Gen_21:8-10, Gal_4:28-31, Isa_28:9, Heb_6:1-2, 2Ti_3:16-17, Tit_3:8, Eph_5:23-26,

15-4. நித்திய ஜீவ வார்த்தைகளினால் நல்ல ருசியான விருந்து இருதயத்தில் நடைபெறுகிறது :-

தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட நித்திய ஜீவ வார்த்தைகளினால் நல்ல ருசியான விருந்து இருதயத்தில் பரிமாறப்படுகிறது.

Joh 5:39 வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவை களே.

Joh 5:40 அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டா கும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை.

Joh 6:68 சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.

Joh 6:69 நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் Deu 8:3, Luk 8:10, Mat 13:10-15, Mar 4:10-12, Psa 49:4, Psa 78:2 Mat 5:1-10, Psa 19:1-6, Job 22:22, Job 23:12, Job 37:1-5, Pro 2:6, Mat 28:20, Jer 9:20, 2Pe 1:18-19, Pro 5:7, Joh 2:5, Psa 132:15, Pro 1:23, 1Jo 1:1-3, 1Jo 2:7-8, Joh 1:1-5, Rev 1:5, Rev 3:14, Rev 19:13,

15-5. நித்திய ஜீவ வார்த்தைகளினால் கடைசிகால இரட்சிப்பின் நற்செய்தி:-

நித்திய ஜீவ வார்த்தைகளினால் கடைசிகால இரட்சிப் பின் நற்செய்தி இருதயத்திற்கு அறிவிக்கப்படுகிறது 1Pe 1:5, 1Pe 1:18-25,Rev 14:6-7, 1Pe 4:17-19, Rev 1:1-3, Jam 1:16-21, 1Pe 2:1-9, 1Jo 2:7-14, 1Jo 2:21-27, Joh 6:27-39, Joh 6:40-47,Joh 6:48-60,

தலைமுறை, தலைமுறையாக இவைகளை பின்பற்ற வேண் டும் என்று குறிப்பிட்ட வேத பகுதிகள் : நித்திய ஜீவ வார்த்தைகள். Gen 17:12, Exo 3:15, Exo 12:14, Exo 31:13Exo 34:7, Lev 3:17, Psa 45:17, Psa 100:5, Dan 4:3, Dan 4:34 Joe 3:20,

15-6. சுய நீதியின் வஸ்திரம் **/** மறுதேசத்து ராஜகுமாரரின் வஸ்திரம் தரித்து விருந்து கொண்டாடுகிறவர்களின் பிரதிபலன்கள்

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொள்ளாமல், தங்கள் சுய நீதியின் வஸ்திரம் / மறுதேசத்து ராஜ குமாரரின் வஸ்திரம் தரித்துக்கொண்டு; தேவனுடைய வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு தேவனுடைய நீதியுள்ள நியாயத் தீர்ப்பு

வேத பிரமாணத்தின்படி நீதியின் வஸ்திரம் தரித்துக்கொண்டு நித்திய ஜீவ வார்த்தைகளின் விருந்தில் கலந்து கொண்டவர்களுக்கு: தேவன் தம்முடைய இராஜ்ஜியத்தின் பதவிகளை பரிசாக கொடுக்க வரும்போது ;

Luk 14:7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்:

Luk 14:8 ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான்.

Luk 14:9 அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும்.

Luk 14:10 நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு; அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனேகூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்.

Luk 14:11 தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்.

ஆனால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் ஒருவன் பந்தியில் மிகவும் முதன்மையான இடமாகிய இராஜாவின் ஸ்தானத் தில் அமர்ந்து கொண்டு, நான் தான் கிறிஸ்து என்று சொல்லிக் கொள்ளுகிற இராஜ வஸ்திரத்தை தரித்திருக்கிறவனைப் பார்த்து :

Mat 22:11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு:

Mat 22:12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்.

Mat 22:13 அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.

Mat 22:14 அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

Mat 24:3 பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

Mat 24:4 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;

Mat 24:5 ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

Isa 65:12 Isa_65:12, ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் : இதோ, என் ஊழியக்காரரர் புசிப்பார்கள், நீங்களோ பசியாயிருப்பீர்கள் ; இதோ, என் ஊழியக்காரரர் குடிப்பார்கள், நீங்களோ தாகமாயிருப்பீர்கள்; இதோ, என் ஊழியக்காரரர் சந்தோஷப்படுவார்கள், நீங்களோ வெட்கப்படுவீர்கள்.

Isa 65:13 Isa_65:13, இதோ, என் ஊழியக்காரரர் மன மகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள், நீங்களோ மன நோவினாலே அலறி, ஆவியின் முறிவினாலே புலம்புவீர்கள்.

. Mat_23:5-12, Mat_24:23-26, Joh_7:18, Joh_12:43, Isa_2:5-6, 1Th_2:6,Rom_11:8-10, Psa_69:22-28, Psa_109:5-10, Isa_28:7-13,Isa_29:9-14,Jer_7:34, Jer_16:9, Jer_25:10, Rev_18:23,

16-0 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: கிறிஸ்துவுக்கு/சத்தியத்திற்கு உண்டாகும் பாடுகளை குறித்து, நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்:-

16-1 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற, இரட்சிப்புக்கு உண்டாகும் பாடுகளை குறித்து; நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-2 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: தேவனுடைய புத்திரர் கடைசிக்காலத்திலே வெளிப்படுவதைக் குறித்து, நமக்காகப்

பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-3- கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும், நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு, நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-4 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில், வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-5 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-6 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ; அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

16-7 சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்.

16-1 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற, இரட்சிப்புக்கு உண்டாகும் பாடுகளை குறித்து; நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு, பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்ததின் மூலம், கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற, சத்தியத்தின் இரட்சிப்பை ஏற்றுக்கொண்ட தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களிள் ஒரு சிலர்: இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் கலந்து கொண்டு; தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில், மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

1Pe 1:2 பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.

1Pe 1:3 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக;

1Pe 1:4 அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.

1Pe 1:5 கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1Pe 1:6 இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.

1Pe 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது

உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

1Pe 1:8 அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,

1Pe 1:9 உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்.

1Pe 1:10 உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்;

1Pe 1:11 தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.

1Pe 1:12 தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.

1Pe 1:13 ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

1Pe 1:14 நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,

1Pe 1:15 உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.

1Pe 1:16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

1Pe 1:17 அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.

1Pe 1:18 உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,

1Pe 1:19 குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.

1Pe 1:20 அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.

1Pe 1:21 உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.

1Pe 1:22 ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;

1Pe 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.

1Pe 1:24 மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.

1Pe 1:25 கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.

16-2 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: தேவனுடைய புத்திரர் கடைசிக்காலத்திலே வெளிப்படுவதைக் குறித்து, நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு; பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்ததின் மூலம்: இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம், விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி; இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை வரை, வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது போல; இயேசு கிறிஸ்துவைப் பற்றும் சத்தியத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை,வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் மாயையின் கீழ் அடைத்துப்போட்டிருக்கிறது .

கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற, சத்தியத்தின் இரட்சிப்பை ஏற்றுக்கொண்ட தேவனால் முன் குறிக்கப்பட்டவர்களிள் ஒரு சிலர்: இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்தில் கலந்து கொண்டு; தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில், மறுரூபமடைந்து: தங்களுடைய சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறபோது: கிறிஸ்துவினுடைய இரத்தம், ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு தங்களுடைய மனச்சாட்சியை; ஆவி,ஆத்துமாவில், மரணத்தை உண்டாகும் செத்தக் கிரியைகளை மனந்திரும்பி சுத்திகரிக்கிறது.

தங்களுடைய மனச்சாட்சியை: ஆவி,ஆத்துமாவில், மரணத்தை உண்டாகும் செத்தக் கிரியைகளை ஜெயமாக விழுங்குதலின் மூலம், தேவனுடைய சத்தியமான நித்திய ஜீவ வசனங்களின் அறிவில் மறு ரூபமடைந்து; அதன் கிரியைகளின் மூலம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை, ஏகமாய்ப் மாயையின் கீழ் அடைத்துப்போட்டதிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, அழிவுள்ளது அழியாமையையும், சாவுள்ளது சாவாமையும், தரித்துக் கொள்ளும் போது, மரணம் ஜெயமாக விழுங்கப்படும்.

தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த: தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம், முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட, நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரத்தை; கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களோடு, பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறோம்.

Rom 8:19 மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது.

Rom 8:20 அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே,

Rom 8:21 அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

Rom 8:22 ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

Rom 8:23 அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.

Rom 8:24 அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?

Rom 8:25 நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.

Rom 8:26 அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.

Rom 8:27 ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

Rom 8:28 அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

Rom 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;

Rom 8:30 எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

Rom 8:31 இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?

Rom 8:32 தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

Rom 8:33 தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.

Rom 8:34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.

16-3-0 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு; நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு, பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

Joh 17:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:

Joh 17:2 பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக்

கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

Joh 17:3 ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

Joh 17:4 பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.

Joh 17:5 பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

16-3-1 பிதாவானவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

Joh 6:37 பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.

Joh 6:38 என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

Joh 6:39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

16-3-2 குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

Joh 6:40 குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக்

கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

Joh 6:41 நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:

Joh 6:42 இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள்.

16-3-3 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.

Joh 6:43 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்கவேண்டாம்.

Joh 6:44 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.

Joh 6:45 எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.

16-3-4 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.

Joh 6:53 அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Joh 6:54 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.

Joh 6:55 என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

Joh 6:56 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.

Joh 6:57 ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

Joh 6:58 வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

16-4 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு, பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

Joh 17:6 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

Joh 17:7 நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.

Joh 17:8 நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

Joh 17:9 நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.

Joh 17:10 என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.

16-5 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

Joh 17:11 நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.

Joh 17:12 நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.

Joh 17:13 இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.

Joh 17:14 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.

Joh 17:15 நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

16-6 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்க ளுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

.

Joh 17:16 நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.

Joh 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

Joh 17:18 நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

Joh 17:19 அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

Joh 17:20 நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

16-7 கிறிஸ்துவின் ஆவியானவர்தாமே: பிதாவே, நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படி நமக்காகப் பிதாவினிடத்தில் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பரிந்து பேசி வேண்டுதல் செய்கிறார்.

Joh 17:21 அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

Joh 17:22 நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

Joh 17:23 ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

Joh 17:24 பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.

Joh 17:25 நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

Joh 17:26 நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.

,Joh_17:1-6 , Joh_17:7-12 , Joh_17:13-20; ,Joh_17:21-26 , Joh_6:37-39, Joh_6:40-42, Joh_6:43-45, Joh_6:53-58, Rom_8:19-26, Rom_8:27-30,Rom_8:31-34, Heb_7:24-25, Heb_9:24; 1Jo_2:1-2,1Pe_1:4-9, 1Pe_1:10-13,1Pe_1:23,

16-7 சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்.

Isa 26:1 அக்காலத்திலே யூதாதேசத்தில் பாடப்படும் பாட்டாவது: பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார்.

Isa 26:2 சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்.

Isa 26:3 உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.

Isa 26:4 கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.

Isa 26:5 அவர் உயரத்திலே வாசமாயிருக்கிறவர்களையும் கீழே தள்ளுகிறார், உயர்ந்த நகரத்தையும் தாழ்த்துகிறார்; அவர் தரைமட்டும் தாழ்த்தி அது மண்ணாகுமட்டும் இடியப்பண்ணுவார்.

Isa 26:6 கால் அதை மிதிக்கும், சிறுமையானவர்களின் காலும் எளிமையானவர்களின் அடிகளுமே அதை மிதிக்கும்.

Isa 26:7 நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்.

Isa 26:8 கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகளின் வழியிலே உமக்குக் காத்திருக்கிறோம்; உமது நாமமும், உம்மை நினைக்கும் நினைவும் எங்கள் ஆத்தும வாஞ்சையாயிருக்கிறது.

Isa 26:9 என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.

Isa 26:10 துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்.

Phi_3:9-14;Isa_26:1-9; Col_1:5-6,Tit_1:1-4,Heb_10:25-29, Eph_1:13,2Ti_3:7-8 ,Heb_10:26-30,Jam_1:18, Jam_3:14, Jam_5:19-20, 2Pe_1:5-12,1Ti_2:1-7,1Ti_4:1-3, 1Pe_1:20-22,1Jo_1:6, 1Jo_1:8, 1Jo_2:21 ,1Jo_5:6-8, 2Jo_1:1-4 ,Pro_22:17-21 , 3Jo_1:3-4 Isa_59:14-15 , Dan_9:12-13 , Dan_10:21, Zec_8:3,Zec_8:6-8, Zec_8:16 , Zec_8:19,Mal_2:4-6, Mar_12:29-34,Joh_1:14-18, Joh_3:17-21, Joh_4:21-24 , Joh_8:31-32,Joh_8:40-46 ,Joh_14:5-6, Joh_14:17, Joh_15:26, Joh_16:7-13 ,Joh_18:37-38 ,Rom_1:25, Rom_2:2, Rom_2:8, Rom_2:20, 1Co_5:6-8, 1Co_13:1-8, Joh_16:13 , Joh_6:28-35,

17-0 முன்மாரி, பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் மூலம்; தேவன் கிருபையினாலும் சத்தியத்தினாலும் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்:-

17-1 முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் மூலம், தேவன் கிருபையினால் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்.

17-2 முன்மாரி, பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் மூலம், தேவன் கிருபையினாலும் சத்தியத்தினாலும், தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்.

17-1 முன்மாரி மழையாகிய பரிசுத்த ஆவியின் மூலம், தேவன் கிருபையினால் தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்.

பரிசுத்த ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப்பிர மாணம் / முன்மாரி மழையின் ஊழியங்களின் ஐந்து வகையான ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்.

Eph_4:11-13, 1Co_12:4-12, 1Co_12:27-31, 1Pe_4:10-11,

1. அப்போஸ்தலர் 2 தீர்க்கதரிசி 3 போதகர் 4 மேய்ப்பர் 5 சுவிசேஷகர்; பரிசுத்த ஆவியினால் தேவன் பகிர்ந்து கொடுத்த, இந்த ஐந்து வகையான ஊழிய அழைப்பில் ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள்: கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல, தரித்துக்கொள்ள கூடிய இரண்டு அடிப்படையான நற்கிரியைகளை, தங்களுடைய ஊழிய அழைப்பில் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணத்தினுடைய நற்கிரியைகள் ஒரு ஜோடியானவை கள்; கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல தரித்துக் கொள்ள கூடியவைகள்.

1. பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில் ஆயத்தம் என்னும் சமாதானத்தில் வலது பக்கத்தின் பாதரட்சை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள் :-

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது: பக்தி விருத்தியடைந்து கட்டப்படுவதற்காக; ஒவ்வொரு நாளும் சபையின் ஒரு ஊழியராக இருந்து கொண்டு நற்கிரியைகளை ஊழியத்தில் நிறைவேற்றுவது.

2. பரிசுத்த ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில், ஆயத்தம் என்னும் சமாதானத்தின் இடது பக்கத்தின் பாதாரட்சை போல; தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:-

ஒவ்வொரு நாளும், பரிசுத்தத்தில் சீர்பொருந்துவதற்காக, தன்னுடைய குறைகளை சீர்த்திருத்திக்கொண்டு; சபையின் ஒரு ஊழியராக இருப்பதற்காக பயிற்சியை எடுத்துக்கொள்வது.

Eph 4:12  For the perfecting of the saints, for the work of the ministry, for the edifying of the body of Christ: *(King James Version)*

Eph 4:12  For the training of the saints as servants in the church, for the building up of the body of Christ: *(Bible in basic english 1965)*

Eph 4:7  கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

Eph 4:8  ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

Eph 4:9  ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

Eph 4:10  இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

Eph 4:11  மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்,

Eph 4:12  பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

Eph 4:13  அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

Eph 4:14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

Eph 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

Eph 4:16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

2Co 10:12 ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

2Co 10:13 நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மைபாராட்டாமல், உங்களிடம்வரைக்கும் வந்தெட்டத்தக்கதாக, தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவுப்பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுகிறோம்.

2Co 10:14 உங்களிடத்தில் வந்தெட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை; நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடம் வரைக்கும் வந்தோமே.

2Co 10:15 எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மைபாராட்டமாட்டோம்.

2Co 10:16 ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது, மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

2Co 10:17 மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

2Co 10:18 தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.

Rom_1:16, Rom_12:1-6, Hab_2:1-4, Rom_8:1-4;1Pe_3:16-21, 1Pe_4:1-6,Eph_4:7-13, 1Co_12:1-7, Act_14:3,Act_20:24, Act_20:32, Rom_15:14-16,1Co_3:9-10, Rom_1:5-7, 1Co_15:9-10 , Gal_1:14-17,Gal_2:8-10, Eph_3:1-2,Eph_3:7-8 ,1Pe_4:10,Eph_4:30-32,2Co_11:12-15, 1Co_3:9-10, 1Co_15:9-10; 2Co_6:1-3; Eph_3:6-8,

17-2 முன்மாரி, பின்மாரி மழையாகிய அபிஷேக ஆவியின் மூலம்; தேவன் கிருபையினாலும் சத்தியத்தினாலும், தமது சித்தப்படி ஊழியர் அழைப்பைத் தீர்மானிக்கிறார்.

அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணம் / முன்மாரி, பின்மாரி மழை ஊழியங்களின் இரண்டு வகையான ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணங்கள்: இவைகள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, ஆயத்தம் என்னும் சமாதானத் தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சை போல தரித்துக் கொள்ளக் கூடிய, ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் அளவுப்பிரமாணங்கள்.

1. கர்த்தருக்கு ஆராதனை செய்யும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பு: தீர்க்கதரிசிகளான மோசே, எலியா இவர்களின் ஊழியங்கள்.

2. கர்த்தருடைய வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணும் ஊழிய அழைப்பு: தீர்க்கதரிசிகளான மோசே, எலியா, எலிசா, யோவான், இவர்களின் ஊழியங்கள்; அபிஷேக ஆவியினுடைய ஊழிய அழைப்பின் அளவுப் பிரமாணத்தில், தேவன் ஒரு வகையான ஊழிய அழைப்பு மட்டும் தனியாக பிரித்து / பகிர்ந்து கொடுப் பதில்லை, இவைகள் ஒரு ஜோடியானவைகள், இவைகளை பிரிக்க முடியாதவைகள்.

Zar_4:2, Zar_4:11-14, Rev_2:5, Rev_11:4, Mal_4:1-6, Mal_3:13-18, 1Ki_18:17-29, 1Ki_18:30-46,

அபிஷேக ஆவியினால், தேவன் பகிர்ந்து கொடுத்த ஒரு ஜோடியான ஊழிய அழைப்பை பெற்றுக்கொண்டவர்கள்: கீழே குறிப்பிட்ட ஒரு

ஜோடியான நற்கிரியைகளையும் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது, இடது பக்கத்தின் பாதரட்சையை போல தரித்துக் கொள்ள கூடிய  இரண்டு அடிப்படையான நற்கிரியை களையும் தங்களுடைய ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் ஊழியங்களில் நிறைவேற்றும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1. அபிஷேக ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில், ஆயத்தம் என்னும் சமாதானத்தின் வலது பக்கத்தின் பாதரட்சை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:- Rev_11:1-13,

கர்த்தரை ஆராதிக்கும்படி ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பையும் , கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும் ஊழிய அழைப்பையும்,கலந்த ஒரு ஜோடியான  ஊழிய அழைப்பின் தேவ சித் தத்தை; தேவனுடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்ட, நாற்பத்திரண்டு மாதங்களில் நிறைவேற்றுவது.

2. அபிஷேக ஆவியினால் பெற்றுக்கொண்ட ஊழியத்தில் ஆயத்தம் என்னும் சமாதானத்தின் இடது பக்கத்தின் பாதரட்சையை போல, தரித்துக் கொள்ள வேண்டிய நற்கிரியைகள்:- Rev_11:1-13

தேவ வார்த்தையைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் சாட்சி யைக்குறித்தும், உள்ள தரிசனங்களைப் பின்பற்றி ஒரு ஜோடியான ஊழிய அழைப்பின் நற்கிரியைகளை செய்து; தேவனுடைய இராஜ்ஜி யம் ஸ்தாபிக்கப்பட, நாற்பத்திரண்டு மாதங்களில் தேவ சித்தத்தின் ஊழிய அழைப்பை நிறைவேற்றுவது.

Deu_11:13-17, Job_29:21-23, Pro_16:15, Jer_3:1-5, Jer_5:23-29, Hos_6:1-3, Joe_2:21-32, Zec_10:1-6

18-0 தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, தேவனாலே பிறந்தவர்கள்: கல்லான இருதயத்திலிருந்து  மாம்சமான இருதயமாக மாறினவர்கள்: மாம்சமான இருதயமாகிய  பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

18-1 தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, தேவனாலே பிறந்தவர்கள்:-

தேவனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். தேவனுடைய வார்த்தையின் ஜீவன்: மனுஷருக்கு ஒளியாயிருந்து, இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். தேவனுடைய வார்த்தைகள் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

Joh_1:1-5, Joh_1:12-14,Joh_3:3-8 , 1Jo_5:1, 1Jo_5:18,1Jo_2:29, 1Jo_3:9, 1Jo_4:7, 1Jo_5:4,

18-2 தேவனாலே பிறந்தவர்கள்: கர்த்தருடைய சரீரத்தை இன்னதென்று நிதானித்து அறிந்து போஜனபானம் பண்ணுகிறார்கள்:-

தேவனுடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்தவர்கள், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அதிகாரங்களை சுதந்தரித்துக் கொள்ளுவதற்காக; தேவனுடைய புதிய உடன்படிக்கையின்படி, முதலாங்கூடாரமாகிய தங்களுடைய பாவ சரீரத்தை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறபோது: தங்களுடைய இரண்டாந் திரைக்குள்ளே இருக்கிற கல்லான இருதயம், தேவனுடைய மாம்சமான இருதயமாக மறுரூபமடைந்து நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறதின் மூலம் புத்தியுள்ள ஆராதனை நடைபெறுகிறது.

இவர்கள், இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரத்திலிருக்கிற மாம்சமான இருதயமாகிய தேவனுடைய பலிபீடத்தில், ஆவி,ஆத்துமா,சரீரத்தில்

ஐக்கியமாயிருந்து; தேவனுடைய வார்த்தைகளின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படி, கர்த்தருடைய சரீரமாகிய வார்த்தைகளையும் இரத்தமாகிய நியாத்தீர்ப்பையும் இன்னதென்று நிதானித்து அறிந்து போஜனபானம் பண்ணுகிறார்கள்.

இவர்கள்,கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களோடு ஐக்கியமாயிருந்து; இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து: தங்களுக்கு தேவன் பகிர்ந்து கொடுத்த, ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்கள்.

Luk_22:19-20,Joh_6:48-52, Joh_6:53-58,1Co_5:7-8;1Co_10:15-18; 1Co_11:23-26, Heb_9:8-10, Heb_13:9-13; Rom_12:1-2,

18-3 தேவனுடைய வார்த்தைகளினால் மாம்சமாக மாறினவர்கள்: மாம்சமாக மாறின, தேவனுடைய இருதயமாகிய பலிபீடத்திலிருந்து; தேவனுடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்கள்:-

இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரத்திலிருக்கிற மாம்சமான இருதயமாகிய தேவனுடைய பலிபீடத்தில், ஆவி,ஆத்துமா,சரீரத்தில் ஐக்கியமாயிருந்து; தேவனுடைய வார்த்தைகளின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும்படி புசித்த , கர்த்தருடைய சரீரமாகிய வார்த்தைகளையும், இரத்தமாகிய நியாத்தீர்ப்பையும், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த வார்த்தைகளாக வெளிப்படுத்துகிறார்கள்; அந்த வார்த்தைகளில் உள்ள ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்து, இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

Psa_40:8; Jer_31:33; Eze_11:19, Eze_36:25-27; Heb_8:10, Heb_10:16, Joh_14:10-17, Joh_14:18-25, Joh_15:1-8, Joh_15:9-15,Joh_15:16-21; Joh_15:22-27; Joh_17:14-20, Joh_17:21-26;

Eph 4:1 ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,

Eph 4:2 மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,

Eph 4:3 சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

Eph 4:4 உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு;

Eph 4:5 ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,

Eph 4:6 எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.

Eph 4:7 கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது.

Eph 4:8 ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

Eph 4:9 ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?

Eph 4:10 இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.

Eph 4:11 மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்,

Eph 4:12 பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

Eph 4:13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

Eph 4:14 நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,

Eph 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

Eph 4:16 அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.

18-4 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்களின் நியாயத்தீர்ப்புகள்:-

1Co 11:27 இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.

1Co 11:28 எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.

1Co 11:29 என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.

1Co 11:30 இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.

1Co 11:31 நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.

1Co 11:32 நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்.

1Co 11:33 ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.

1Co 11:34 நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடிவராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன். மற்றக் காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்.

1Co_11:27-32, 1Co_10:21; Lev_10:1-3; Num_9:10, Num_9:13;

18-5 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறவர்களின் அடையாளங்கள்:-

தேவனுடைய வார்த்தையினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்தவர்கள், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அதிகாரங்களை சுதந்தரித்துக் கொள்ளாமல்; தேவனுடைய புதிய உடன்படிக்கையின்படி,இயேசு கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார்:என்ற இந்த உதாரணத்தை பின்பற்றாமல்/

முதலாங்கூடாரமாகிய தங்களுடைய பாவ சரீரத்தை, பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்காமல்: தங்களுடைய இரண்டாந் திரைக்குள்ளே இருக்கிற கல்லான இருதயத்திலிருந்து , புத்தியில்லாத ஆராதனை நடைபெறுகிறது;

இவர்கள், இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரத்திலிருக்கிற கல்லான இருதயமாகிய மனிதனுடைய பலிபீடத்தில், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்து;

எழுத்தின்படி கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறார்கள்.

இவர்கள், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களோடு ஐக்கியமாகயிராமல் ; இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரித்து, மனிதனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து: தங்களுக்கு மனிதன் பகிர்ந்து கொடுத்த, ஊழியர் அழைப்பின் அளவுப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார்கள்.

1Co 10:15 உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப்பாருங்கள்.

1Co 10:16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

1Co 10:17 அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

1Co 10:18 மாம்சத்தின்படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா?

1Co 10:19 இப்படியிருக்க, விக்கிரகம் ஒரு பொருளென்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ?

1Co 10:20 அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை.

1Co 10:21 நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே.

1Co 10:22 நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?

1Co 10:23 எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது.

1Co 10:24 ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்.

18-6 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்; குற்றமுள்ளவர்களாயிருந்து பலவீனராக்கும் ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்:-

1Co 3:1 மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல்,

மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று.

1Co 3:2 நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை.

1Co 3:3 பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

1Co 3:4 ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?

1Co 3:5 பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே.

Heb 5:12 காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

Heb 5:13 பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.

Heb 5:14 பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.

1Co 3:1-4;1Co_11:17-22; Heb_5:12-14; Isa_28:9; Psa_131:1-2; 1Co_2:1-5, 1Co_2:6-10,1Co_2:11-16,

18-7 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்; குற்றமுள்ளவர்களாயிருந்து வியாதியுள்ளவர்களாக்கும், ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்:-

1Ti 6:3 ஒருவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்,

1Ti 6:4 அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும் பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி,

1Ti 6:5 கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு.

2Ti 2:13 நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்.

2Ti 2:14 இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல், கேட்கிறவர்களைக் கவிழ்த்துப்போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு.

2Ti 2:15 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

2Ti 2:16 சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்;

2Ti 2:17 அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்;

2Ti 2:18 அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்.

2Ti 2:19 ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும்,

கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது.

1Ti_6:3-5,2Ti_2:15-17,1Pe_4:3-6, Mat_8:19-22,Joh_5:25-29,

18-8 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்; குற்றமுள்ளவர்களாயிருந்து, கனநித்திரையின் ஆவியை ஆக்கினைத்தீர்ப்பாக வருவித்துக் கொண்டார்கள்.

Isa 29:10 கர்த்தர் உங்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, உங்கள் கண்களை அடைத்து, ஞானதிருஷ்டிக்காரராகிய உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போட்டார்.

Isa 29:11 ஆதலால் தரிசனமெல்லாம் உங்களுக்கு முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வசனங்களைப்போலிருக்கும்; வாசிக்க அறிந்திருக்கிற ஒருவனுக்கு அதைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன்: இது என்னால் கூடாது, இது முத்திரித்திருக்கிறது என்பான்.

Isa 29:12 அல்லது வாசிக்கத் தெரியாதவனிடத்தில் புஸ்தகத்தைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன்: எனக்கு வாசிக்கத் தெரியாது என்பான்.

Isa 29:13 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.

Isa 29:14 ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

Isa_29:10-14, Isa_6:9-10; Psa_69:21-28; Mic_3:1-6; Mic_3:7-12; Act_28:26-27; Rom_11:7-11;

18-9 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்: குற்றமுள்ளவர்களாயிருந்து, தேவனுடைய வாயிலிருந்து வாந்திபண்ணிப்பட்டு, ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்.

Rev 3:14 லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் சொல்லுகிறதாவது;

Rev 3:15 உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்.

Rev 3:16 இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.

Rev 3:17 நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;

Rev 3:18 நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.

Rev 3:19 நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு.

Rev 3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.

Rev 3:21 நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ

அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

Rev 3:22 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது என்றார்.

18-10 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்: குற்றமுள்ளவர்களாயிருந்து, தேவனுடைய வாயிலிருந்து வாந்திபண்ணிப்பட்டு, ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்.

Num 12:9 கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

Num 12:10 மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப்போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.

Num 12:11 அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும்.

Num 12:12 தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்துவிழுந்த பிள்ளையைப்போல அவள் ஆகாதிருப்பாளாக என்றான்.

Num 12:13 அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.

Num 12:14 கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக்கொள்ளப்படக்கடவள் என்றார்.

Rev_3:14-21,Num_12:9-14; Tit_1:9-10,Lev_20:20-22.Isa_57:20; Jud_1:1-5; Jud_1:6-10;Jud_1:11-15; Jud_1:16-21;Jud_1:22-26;

18-11 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்: குற்றமுள்ளவர்களாயிருந்து தேவனுடைய வார்த்தைகளை வாந்திபண்ணும், ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்.

Isa 28:7 ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழி தப்பிப்போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்.

Isa 28:8 போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை.

Isa 28:9 அவர் யாருக்கு அறிவைப் போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்? பால்மறந்தவர்களுக்கும், முலை மறக்கப்பண்ணப்பட்டவர்களுக்குமே.

Isa 28:10 கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்.

Isa 28:11 பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.

Isa 28:12 இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.

Isa 28:13 ஆதலால் அவர்கள் போய், பின்னிட்டு விழுந்து, நொறுங்கும்படிக்கும், சிக்குண்டு பிடிபடும்படிக்கும், கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக இருக்கும்.

Isa 28:14 ஆகையால் எருசலேமிலுள்ள இந்த ஜனத்தை ஆளுகிற நிந்தனைக்காரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

Isa 28:15 நீங்கள்: மரணத்தோடே உடன்படிக்கையும், பாதாளத்தோடே ஒப்பந்தமும் பண்ணினோம்; வாதை பெருவெள்ளமாய்ப்

புரண்டுவந்தாலும் எங்களை அணுகாது; நாங்கள் பொய்யை எங்களுக்கு அடைக்கலமாக்கி, மாயையின் மறைவிலே வந்து அடைந்தோம் என்கிறீர்களே.

Isa 28:16 ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்.

Isa 28:17 நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டுபோகும்.

Isa 28:18 நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்; வாதை புரண்டுவரும்போது அதின்கீழ் மிதிக்கப்படுவீர்கள்.

Isa 28:19 அது புரண்டுவந்தமாத்திரத்தில் உங்களை அடித்துக்கொண்டுபோம்; அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டுவரும்; அதைப்பற்றிப் பிறக்குஞ்செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும்.

Isa_28:1-7; Isa_28:8-12; Isa_28:13-17; Isa_28:18-22; Isa_30:27-28; Isa_8:8-13;Isa_8:14-20;Isa_8:21-22; Rev_3:14-21,Num_12:9-14; Tit_1:9-10,Lev_20:20-22.Isa_57:20; Jud_1:1-5; Jud_1:6-10;Jud_1:11-15; Jud_1:16-21;Jud_1:22-26;

18-12 கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாமல், போஜனபானம் பண்ணினவர்கள் அநேகர்: விருத்தசேதனத்தில் இடறிவிழுந்து, குற்றமுள்ளவர்களாயிருந்து ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக் கொண்டார்கள்:-

Gal 6:12 மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தாங்கள் கிறிஸ்துவினுடைய சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கே உங்களை விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளக் கட்டாயம்பண்ணுகிறார்கள்.

Gal 6:13 விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்;

அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

Gal 6:14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்.

Gal 6:15 கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்.

Gal 6:16 இந்தப் பிரமாணத்தின்படி நடந்துவருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

Gal 6:17 இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்.

Gal 6:18 சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்.

Heb 9:8 அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.

Heb 9:9 அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்.

Heb 9:10 இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

Rom_3:1-2, Rom_4:9-12 , Rom_15:8-10, 1Co_7:19, Gal_2:7-9 , Gal_5:6, Gal_6:12-16, Eph_2:11-16, Phi_3:3, Gen_17:12; Heb_9:8-10, Heb_13:9-13;

முடிவுரை

மனச் சாட்சியின் மூலம் தேவனை அறிந்தவர்கள் அவருக்கு துதி, கனம், மகிமை ஆகியவைகளை செலுத்தி ஆவியில் பிழைப்பார்கள். மனச்சாட்சி மூலம் தேவனோடு தொடர்பு கொள்ளும் வழி முறைகளிலிருந்து திசை மாறி, தேவனுக்கு துதி, கனம், மகிமை செலுத்தாதவர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் சொல்லப்படட் எல்லா சாபங்களும் வந்து அவர்களுக்கு பலிக்கும்.

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளாதவர்கள் மற்றும் தேவனுடைய சித்தத்தை விட்டு வழிவிலகுகிறவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் அடிமைப்பட்டு தேவ ஆசீர்வாதங்களை இழக்கிறார்கள்.

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள். ஆகையால் ஜாதிகளே கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள். பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்திற்கு செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள் மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்

இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் மூலம் தேவனுடன் உடன்படிக்கை செய்து இரட்சிப்பை பெற்றவர்களின் மூன்று நிலைகள். 1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் 2 தேடுகிறவர்கள் 3 மற்றவர்கள்

1 தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் :- தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவ நீதியை அடைந்திருக்கிறார்கள். 2 தேடுகிறவர்கள்:- தேவ நீதியை தேடுகிறவர்களின் ஆவிக்குரிய இடறுதல்களில் விழுந்துகொண்டிருக்கிறார்கள்.

1 தேவ நீதியைத் தேடாமல் தங்கள் சுய நீதியை நிலை நிறுத்த முயற்சி செய்தல்.

2 . நியாயப்பிரமாண நீதியின் கிரியைகளின் மூலம் நீதிப்பிரமாணத்தை தேடுவது.

3. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடாமல், பரலோகத்தில் வாசல் கதவுகளை தொடர்ந்து தட்டிக்கொண்டிருப்பது.

4. தேவனுடைய சித்தத்தை செய்யாமல் தங்களது தேவைகள் சந்திக்கப்பட தேவனிடம் கேட்பது.

5. முதலாவது தேவனுடைய நீதியைத்தேடாமல் தங்கள் சுய விருப்பங்களை தேடி அவைகளை அடையும்படி தேவனை நோக்கி கேட்பது.

6. மூலைக்கல்லில் இடறுவதற்கு அறியாமைதான் மூலக்கார ணம் ஏனென்றால் அவர்கள்

தேவ அறிவை வெறுத்தார்கள்.

7. ஆவிக்குரிய வாழ்க்கையில் நற்கிரியைகள் இல்லாத பொழுது அறியாமையின் ஆழத்திற்கு செல்லுவது.

8 இயேசு கிறிஸ்துவின் விசுவாச வார்த்தைகளின் உடன் படிக்கையின் மூலம் நற்கிரியைகள் செய்யும் போது அவைகள் எந்த ஒரு மனிதனையும் எந்த சூழ்நிலையிலும் தேவ நிதியை அடைய வழி நடத்தும்

3. மற்றவர்கள்:- சூதும் வஞ்சகமுகமான தந்திரமுள்ள போதகமாகிய பல விதமான காற்றுகளைப் பின்பற்றாமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, தேவன் ஒவ்வொரு அவயவங்களுக்கும் பகிர்ந்து கொடுத்த விசுவாச அளவுப்பிரமாணத்தில் நிலைத்திருந்து, முழு சரீர வளர்ச்சியை ஏற்படுத்தி தேவ சித்தத்தை நிறைவேற்றுவதினால் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியும் இரு மனமாகிய சந்தேக காற்றை பின்பற்றாமல் ஒரு மனமாகயிருந்து முழு விசுவாசத்துடன் நற்கிரியைகள் செய்து தேவ ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ள முடியும்

இந்த நாள் வரைக்கும் காட்டுக் கழுதைகள் போல தங்கள் மதவெறியின் போதகத்தை பின்பற்றி தன் இச்சையாக திரிந்து கொண்டிருப்பவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமாவில், அறிவு, புத்தி, ஞானம், இவைகளைக் கொடுத்து, தங்களை வழி நடத்துகிற உன்னதமான தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்

இந்நாள் வரைக்கும் இவர்கள் தேவ நீதிக்கு கீழ்ப்படியாமல் தங்கள் மனதை கடினப்படுத்தியிருக்கிறார்கள், இவர்கள் நியாத் தீர்ப்புக்கு தப்புவதில்லை இவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து எப்பொழுதும் தீமை செய்வதிலிருந்து மனந்திரும்புகிறார்களோ அப்பொழுது அவர்கள் மீண்டும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்

தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு இந்த புஸ்தகத்தில் புசிக்க ஏற்றபடி / அவரவர் உட்கொள்ளும் அளவுக்கேற்றபடி / தன்மைக்கேற்றபடி பரிமாறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள். ஆனால் தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இயேசு கிறிஸ்து ராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில் கலந்து கொண்டு இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை பல ருசியுள்ள தேவ வார்த்தைகளின் தலைப்புகளாக புசித்து, அதன் சுவைகளை உணர்ந்து கொண்டபடியால், ஆவி, ஆத்துமாவில் மறுரூபமடைந்து, தங்களுக்கு கொடுத்த தேவ சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் ஜெயங்கொள்ளுகிறவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொண்டு பரலோக இராஜ்ஜியத்தின் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கும் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுகிறார்கள். . ஆமென்.



இந்து முறைப்படி பூசாரி வம்சத்தில் பிறந்து என் சிறுவயதிலே பெற்றோர் மரணமடைந்ததால், வறுமையின் காரணமாக கோவையில் உள்ள ஒரு அநாதை இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். கடந்த முப்பது வருடங்களாக தேவனுடைய வார்த்தைகளைக் கண்டு,கேட்டு, உணர்ந்துகொண்டபடியால்; பரலோக இராஜ்யத்தினுடைய உவமைகளில் உள்ள இரகசியங்களின் நன்மை தீமைகளை பகுத்தறிவதின் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்தை ஆவி,ஆத்துமாவில் புசித்து மறுரூபமடைந்தேன்.

## தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து புஸ்தகங்களின் தலைப்புகள்

**1.** பாழாக்குகிற அருவருப்பு தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில்**/** இருதயத்தில் நின்று கொண்டிருக்கிறது**.** மனந்திரும்புங்கள்**,** தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறது.

2. தேவனுடைய வீட்டிலே நியாயத்தீர்ப்பு துவங்குகிறது

3. தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தி

**4.** கிறிஸ்துவின் ஜீவ அப்பங்களை புசிக்கும் மூன்றுவகையான ஜனங்கள்

5. ஆவி,ஆத்துமாவின் மறுபிறப்பும் சரீரத்தின் உயிர்தெழுதலும்

6. நித்திய ஜீவ வார்த்தைகளினால் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து

**7.** தேவனுடைய வெளிப்பாடுகளின் மூல உபதேசங்கள்

**8.** தேவனுடைய வெளிப்பாடுகளின் நீதியின் உபதேசங்கள்

**9.** பூமியின் நான்கு திசைகளிலிருந்து நான்கு வகையான விசுவாசங்கள்

**10.** இந்த மனுஷகுமாரன் யார்?

11. ஆவிக்குரிய இஸ்ரவேலர்களின்/யூதர்களின் அடையாளங்கள்

12. தேவனும் மனிதனும் கேட்ட எட்டு கேள்விகள்

**13** தேவனுடைய நாமத்தை பின்தொடர்கிற நாண்கு வகையான ஜனங்கள்

**14** ஞான அர்த்தமுள்ள சீயோனின் வெளிப்பாடுகள்

**15** தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்.

**16** கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்.

**17** தேவனுடைய இராஜ்யமாகிய ஆயிரம் ஆண்டு ஆட்சியின் தேர்தல் ஆணையம் அறிவிக்கப்பட்டு உபத்திரவ காலத்திற்கு நடைமுறைக்கு வருகிறது.

இந்த புஸ்தகங்களின் தலைப்புக்கள் மூலம் தேவனுடைய சத்தியமான வார்த்தைகளின் விருந்து சமைக்கப்பட்டு,புசிக்க ஏற்**றபடி/ அவரவர் உட்கொள்**ளும் அளவுக்கேற்**றபடி/தன்மைக்**கேற்**றபடி பரிமாறப்படுகிறது.**

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்** தேவனுடன் விசுவாச உடன்படிக்கை செய்த அநேகர் இந்த விருந்தை புசிக்க அபாத்திராக போனார்கள்.

ஆனால் தேவனால் முன் கு**றிக்கப்பட்டவர்க**ளிள் ஒரு சிலர், **இயேசு கிறிஸ்து இராஜாவாக முடிசூட்டப்படும் பட்டாபிஷேக விழாவில்/ ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண** விருந்தில் கலந்து கொண்டு; இந்த தேவனுடைய சத்தியமான வார்த்தைகளை விருந்தாக புசிக்கிறார்கள்.

அதன் சுவைகளை **உணர்ந்து கொண்டவர்கள்,ஆவி,ஆத்துமாவில்,** மறுரூபமடைந்து: தேவன் தங்களுக்கு பகிர்ந்து கொடுத்த தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதின் மூலம் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஆட்சி அதிகாரங்களை பிரதிபலனாக பெற்றுக்கொள்ளுகிறார்கள்.